Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ
(சி-729)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 சித்திரை 04 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஸபர் 14 (17.04.2003) வியாழக்கிழமை இதழ் :196

# அரசுக்கான தனது ஆதரவை முஸ்லிம் காங்கிரஸ் விலக்கும்?

## ரோந்துக் கப்பலை அமைச்சர் பார்வையிட்டார்

இலங்கைக் கடற்படைக்கு அமெரிக்கா அன்பளிப்பாக வழங்கவுள்ள 'கரேஜஸ்' என்ற கரையோரக் காவற்படைக் கப்பலை, அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

மேரிலாண்ட் துறைமுகத்தில் தரித்து நிற்கும் இக்கப்பலை இலங்கைக்கு எடுத்துவர, கடற்படை மாலுமிகளை அமெரிக்காவிற்கு அனுப்பிவைக்கும்படி அமைச்சர் மொறகொட உத்தரவிட்டுள்ளார்.

## மூதூர் விவகாரம் சூடுபிடிக்கிறது

(திருகோணமலை)

**மூதூர் பகுதியில் இரு முஸ்லிம் இளைஞர்கள் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் விவகாரம், தற்போது ஐ.தே.கவுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையிலான பெரும் அரசியல் மோதலாக உருமாறியுள்ளது. அமைச்சர் மஹ்ரூப், தம்மை விமர்சித்ததற்கு பிரதமர் ரணில் நடவடிக்கை எடுக்காவிட்டால், தாம் அரசுக்கு வழங்கும் ஆதரவை விலக்கும் முடிவுக்கு வரவுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடம் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகின்றது.**

மூதூர் பகுதிக்குச் சென்றபோது, அங்கு வைத்துப் பொதுமக்களால் தடுக்கப்பட்டு, அங்கு தங்கியிருக்கும் அமைச்சர் ஹக்கீம் உட்பட ஆறு முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மஹ்ரூப் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அல்லது அவரது பிரதிநிதி மூதூருக்கு வந்து விளக்கம் தரவேண்டும் எனவும், அதுவரை தாம் மூதூரை விட்டு வெளியேறப் போவதில்லை எனவும் அறிவித்துள்ளனர்.

மூதூரில் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் முஸ்லிம் இளைஞர்களில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதி நினைவு எழுச்சி நாட்கள் ஆரம்பம்!!

தியாகதீபம் அன்னை பூபதியின் பதினைந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வுகளின் - எழுச்சிநாட்கள், இன்று ஆரம்பமாகி சனிக்கிழமை வரை யாழ்.குடாநாடெங்கும் மிக உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளன.

வலிகாமம் பகுதி பொது அமைப்புக்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து, நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் சனியன்று காலை 9 மணிக்கு அடையாள உண்ணாவிரதத்தில் ஈடுபடவுள்ளன. பின்னர் மாலை 6 மணிக்கு நினைவுக்கூட்டம் இடம்பெறவுள்ளது.

தீவகத்தில்- புங்குடுதீவு, நயினாதீவு, ஊர்காவற்துறை ஆகிய இடங்களில் சனிக்கிழமை நினைவு நாள் நிகழ்வுகள் இடம்பெறும்.

வேலணையில் - நாளை வெள்ளிக்கிழமை காலை எழுச்சி நிகழ்வுகள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சக்திகிரீவனை விடுவிக்க அமைச்சர் நடவடிக்கை

இந்துசமயப் பேரவைச் செயலாளர் சக்திகிரீவனை பிணையில் விடுவிக்கும்படி, இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன், பிணைமனு ஒன்றினை இன்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவுள்ளார்.

நேற்று இந்துசமயத் தலைவர்களுடனும், பிரமுகர்களுடனும் கலந்துரையாடிய அமைச்சர் மகேஸ்வரன், தடுப்புக்காவலில் இருக்கும் சக்திகிரீவனை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கைதடி சைவ இல்லச் சிறுமிகள் மீது, விடுதிக்காப்பாளர் பாலியல் துஷ்பிரயோகத்தினை மேற்கொண்டதான சந்தேகத்தின் காரணமாக, இந்தச் சிறுவர் இல்லத்தினை நடத்திவந்த இந்துசமயப் பேரவையின் செயலாளர் சக்திகிரீவனும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்க்குழுக்களுக்கு பயிற்சியளித்த அபு அபாஸ் ஈராக்கில் கைதானார்!

### இந்தியாவுக்கும் வந்து சென்றவராம்



அமெரிக்கப் படைகளால் ஈராக்கில் நேற்று கைதுசெய்யப்பட்ட பலஸ்தீன விடுதலை முன்னணியின் தலைவரான அபு அபாஸ், இலங்கையின் முன்னாள் தமிழ் ஆயுதக் குழுக்களுடனும் நெருங்கிய தொடர்புடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர் கடந்த 17 ஆண்டுகளாக ஈராக்கில் தலைமறைவாக வசித்து வந்ததாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னாள் ஆயுதக் குழுக்களான - புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈரோஸ் போன்ற அமைப்புக்களுக்கு இவரே பலஸ்தீனத்தில் வைத்து ஆயுதப் பயிற்சி வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது: இந்திய மாணவரமைப்பு, 1985 இல் இந்தியாவில் ஏற்பாடு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளோடு நாம் இணைந்தே பொருளாதாரத்தை வளர்க்கலாம்

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேட்டி

ஐ.தே.மு. அரசாங்கத்தைக் கவிழ்த்து, புதிய அரசாங்கமொன்றை உருவாக்கலாம் என்ற எதிர்க்கட்சிகளின் கனவு நனவாகாது என, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொதுத்தேர்தல் ஒன்று வந்தாலும் அதனைச் சந்திப்பதற்கு ஐ.தே.மு. அரசாங்கம் தயாராக இருப்பதாக பிரதமர் தெரிவித்தார். வெளிநாட்டுச் செய்தி சேவை ஒன்றுக்கு நேற்று வழங்கிய சிறப்புப் பேட்டி ஒன்றிலேயே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் - சர்வதேச நாடுகள் இலங்கைக்கு எல்லையற்ற நிதியுதவிகளை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றன எனத் தெரிவித்த பிரதமர், அதற்கு நிரந்தர (10 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் தமிழ் இளைஞன் காணாமற்போனதாக அறிவிப்பு

திருமலை - மூதூர் பகுதியில் தமிழ் இளைஞன் ஒருவன் கடந்த புத்தாண்டு தினத்திலிருந்து காணாமற்போயுள்ளான்.

சித்திரவேலு (32 வயது) என்ற இளைஞனே மூதூர் நகரப் பகுதியில் வைத்து திடீரெனக் காணாமற்போனதாக - அவரது உறவினர்கள் பொலிஸ் நிலையத்திலும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமும் புகாரிட்டுள்ளனர். இவர் காணாமற்போனது தொடர்பான விசாரணைகளை விடுதலைப் புலிகளும் மேற்கொண்டு வருகின்றனர்.

## மர்ம விமானங்கள் குறித்த விசாரணை நிறுத்தப்பட்டது

(கொழும்பு)

வாதுவவில், நிலத்துக்கு அடியிலான பதுங்குகுழியொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு சிறிய விமானங்கள் கைப்பற்றப்பட்ட சம்பவம் பற்றிய விசாரணைகளை உடனடியாக நிறுத்துமாறும் - சம்பவ இடத்திலிருந்து விலகுமாறும் பொலிஸாருக்கு, சட்டமா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

இரத்மலானை விமான நிலையத்தில் பயிற்சி அதிகாரியாகக் கடமையாற்றும் அதிகாரி ஒருவருக்குச் சொந்தமான வீட்டிலேயே இந்த விமானங்கள் கண்டுபிடிக்கப்பட்டன

(10 ஆம் பக்கம் பார்க்க)




யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடந்த தமிழிசை மாலை இசை நிகழ்வில், தமிழக பிரபல பின்னணிப் பாடகி ரி.கே.கலா.

### விண்ணாணம் விநாசியர்



அப்ப, ஹக்கீம் நானாவுக்கு புதுப் பிரச்சினை கிடைச்சிட்டுது...!

## இலங்கை அமைதிக்கு உதவ அமெரிக்க நடிகை கோரிக்கை



இலங்கையில் நடைபெறும் சமாதான முயற்சிகளுக்கு சர்வதேசம் உதவவேண்டும் என, அமெரிக்காவின் ஹொலிவூட் நடிகை அஞ்சலினா ஜோலி கேட்டுக்கொண்டுள்ளார்.

ஐ.நா. அகதிகளுக்கான பிரிவின் சிறப்புத் தூதராக இருக்கும் அவர், போரினால் பாதிக்கப்பட்ட சிறுமிகள் சிலரை இலங்கைவந்தபோது சந்தித்ததாகவும், அவர்களது அனுபவங்கள் தமக்கு அதிர்ச்சியையும் வேதனையையும் தந்ததாகவும் கூறினார்.

'ரொம் ரெய்டர்' என்ற, அண்மையில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
01-505632, 074-612656, 01-390128
(சி-730)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் அரிசி வழங்கலுக்கான கேள்வி கோரல்

1. யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2003, மார்ச், ஏப்ரல், மே ஆகிய மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து கொள்வனவு செய்து கீழ்க் குறிப்பிடப் பட்டுள்ள ப.நோ.கூ.சங்கங்களுக்கென கீழே தரப்பட்டுள்ள தொகை அரிசியை நேரடியாக விநியோகிப்ப தற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ப.நோ.கூ. சங்கங்களிடம் இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் வழங்கீடு செய்யப்பட வேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| இல | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | 2003 மார்ச் (MT) | 2003 ஏப்ரல் (MT) | 2003 மே (MT) |
| 01. | யாழ்ப்பாணம் | 250 | 250 | 250 |
| 02. | நல்லூர் | 110 | 110 | 110 |
| 03. | அச்சுவேலி | 115 | 115 | 115 |
| 04. | நீர்வேலி | 120 | 120 | 120 |
| 05. | மானிப்பாய் | 100 | 100 | 100 |
| 06. | பண்டத்தரிப்பு | 70 | 70 | 70 |
| 07. | தெல்லிப்பளை | 47 | 47 | 47 |
| 08. | அளவெட்டி மல்லாகம் | 115 | 115 | 115 |
| 09. | சங்கானை | 150 | 150 | 150 |
| 10. | உடுப்பிட்டி | 30 | 30 | 30 |
| 11. | கட்டைவேலி நெல்லியடி | 40 | 40 | 40 |
| 12. | பருத்தித்துறை | 90 | 90 | 90 |
| 13. | புலோலி | 25 | 25 | 25 |
| 14. | மருதங்கேணி | 60 | 60 | 60 |
| 15. | சுன்னாகம் | 155 | 155 | 155 |
| 16. | சாவகச்சேரி | 115 | 115 | 115 |
| 17. | கைதடி | 60 | 60 | 60 |
| 18. | கொடிகாமம் | 105 | 105 | 105 |
| 19. | வேலணை | 20 | 20 | 20 |
| 20. | புங்குடுதீவு நயினாதீவு | 40 | 40 | 40 |
| 21. | ஊர்காவற்றுறை | 55 | 55 | 55 |
| 22. | காரைநகர் | 40 | 40 | 40 |
| 23. | தீவகம் | 08 | 08 | 08 |
| 24. | நெடுந்தீவு | 20 | 20 | 20 |
| | மொத்தம் | 1940 | 1940 | 1940 |

2. கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/= வினை யாழ்.மாவட்ட புனர்வாழ்வு செயலகத்தில் செலுத்தி கேள்விப்படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 2003.04.21 ஆம் திகதி தொடக்கம் 2003.04.29 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00மணி தொடக்கம் பி.ப3.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களைப் பொறுத்த வரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

3. மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/= ஐ அந்தந்த மாவட்ட செயலகங்களில் செலுத்தி அரசாங்க அதிபர்களிடம் இருந்து கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. கேள்வி கோரப்படவுள்ள அரிசி புழுங்கல் (சிவப்பு நாடு) அரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமான தாகும்.

5. கேள்வியைச் சமர்ப்பிப்பதற்கு கேள்விப் பத்திரத்தைப் பெற்றவர்கள் கேள்வியைச் சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் இருப்பின் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக (கேள்வி முறி-Bid Bond) மெ.தொன் ஒன்றுக்கு ரூபா 600/= படி செலுத்துதல் வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்தில் உள்ளது)

6. பூரணப்படுத்திய இரு கேள்விப் பத்திரங்களை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/ தபால் மூலமாகவோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 30.04.2003 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாகச் சேர்த்தல் வேண்டும். அன்றையதினம் பிற்பகல் 3.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

7. கேள்விப் பத்திரத்தின் தபால் உறையில் இடதுபக்க மேல்மூலையில் "அரிசி வழங்குவதற்கான கேள்வி" என எழுதப்படவேண்டும்.

8. கேள்வி கோருபவர்கள் குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களில் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

9. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி கோரியவர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயல்படுத்தல் முறிக்காக - Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.

10. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும்பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும்பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக் காரணங்கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

**செ.பத்மநாதன்**
**தலைவர்/அரச அதிபர்,**
**மாவட்ட கேள்விச் சபை/மாவட்டசெயலகம்,**
**யாழ்ப்பாணம்.**
14.04.2003. (சி-848)

# 2 ஆவது உலக இந்து மாநாட்டின் மாநில மாநாடு யாழ்ப்பாணத்தில்

இரண்டாவது உலக இந்து மாநாட்டின் யாழப்பாண மாநில மாநாடு மே மாதம் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஒன்பதாம் திகதியும், நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் 10 ஆம் திகதியும் மிகச் சிறப்பாக இந்த மாநாடு இடம்பெறும். மாநாட்டின் ஆரம்ப நாளன்று திருநெல்வேலி சிவன்கோவிலில் இருந்து மாபெரும் எழுச்சி ஊர்வலம் ஒன்றும் நடைபெறவுள்ளது.

உலக இந்து மாநாடு - 2 ஆம் திகதியிலிருந்து 5 ஆம் திகதிவரை கொழும்பில் பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்திலும், பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர் கல்யாண மண்டபத்திலும், வெள்ளவத்தை இராம கிருஷ்ண மண்டபத்திலும், கொட்டாஞ்சேனை விவேகானந்தா மண்டபத்திலும் நடைபெறவுள்ளது. 6 ஆம் திகதி நுவரெலியா நகர மண்டபத்திலும், உலக இந்து மாநாட்டின் நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

அத்துடன் - பிராந்திய மாநாடுகள் கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, மன்னார் ஆகிய தமிழர் பிரதேசங்களில் இடம்பெறுமென, இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் தெரிவித்தார். (ரா

## பத்தாயிரம் பேருக்கு தூய தமிழ்ப் பெயர்

தமிழகத்தில் பத்தாயிரம் பேருக்கு தூய தமிழ்ப் பெயர் சூட்டும் நிகழ்வு, விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன் தலைமையில் இடம்பெற்றது.

ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
சரத்குமார் (இருவேடம்), சிம்ரன்,
ரோஜா, வடிவேல் நடித்த
அரசு
10.30, 2.30, 6.30,9.30
(சி-732)

நிறஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந், சிம்ரன் நடித்த
ரமணா
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
URASSIC PARK 3
(சி-731)

# இன்றைய நாள் இனிய நாள்

**17-04-2003 - வியாழக்கிழமை**

**மேடம்** :- நினைத்த காரிய சித்தி, பிரயாணச் செலவு, குடும்ப மகிழ்ச்சி, இனசன கொண்டாட்டம்.

**இடபம்** :- நற்கீர்த்தி, மன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை, தொழில் விருத்தி, பெரியோர் மதிப்பு.

**மிதுனம்** :- புத்திர பந்துக்களால் கவலை, பொதுசன மதிப்பு, சிநேக விரோதம், தொழில் சிறப்பு.

**கர்க்கடகம்** :- ரோக பீடை, தாரசுகத் தடை, சரீரசுகக் குறைவு, சத்துரு பீடை.

**சிங்கம்** :- இனசன கொண்டாட்டம், புதிய ஸ்தானம், சிநேக லாபம், காரிய சித்தி.

**கன்னி** :- லட்சுமிகரம், இல்லச் சிறப்பு, அதிகார சித்தி, தொழில் குறைவு, தேக மெலிவு.

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

**துலாம்** :- பூமி லாபம், இனசன கவலை, தனதானிய விருத்தி, களஸ்திர சுகத் தடை, மனப்பயம்

**விருச்சிகம்** :- பணவரவு, புதிய ஸ்தானம், இல்லச் சிறப்பு, தன வரவு, வெளியூர்ப் பிரயாணம்.

**தனு** :- பெண்களால் நன்மை, காரிய சித்தி, வாகன சுகம், பிரயாசை மிகுதி.

**மகரம்** :- உக்கிரமான வெற்றி, இல்லச்சிறப்பு, சிநேக லாபம், ஐஸ்வரியப்பேறு.

**கும்பம்** :- எதிர்பாராத விபத்து, கொடுக்கல் வாங்கல் பிணக்கு, நிலை மாற்றம், மனக் கவலை.

**மீனம்** :- பிரயாசை மிகுதி, பெரியோர் மதிப்பு, தாழ்ந்த நிலை, குடும்ப மனஸ்தாபம்.

உ
சிவமயம்

தசாக கிரகயக்ஞ அழைப்பிதழ்

சித்திரபானு வருடம் பங்குனி மாதம் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (08.04.2003) அன்று சிவபதமடைந்த

திருமதி கணேசஐயர் - கோமதி அம்மா

அவர்களின் ஆத்மசாந்தி வேண்டி கிரியைகள் கீழ்வரும் திகதிகளில் நடைபெற இருப்பதால் தாங்கள் வந்து பங்குபற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

17.04.2003 வியாழக்கிழமை காலை 9மணி - தசாகம் (அந்தியேஸ்டி)
18.04.2003 வெள்ளிக்கிழமை - ஏகோதிஸ்டம்
19.04.2003 சனிக்கிழமை - சபீண்டீகரணம்
20.04.2003 ஞாயிற்றுக்கிழமை - கிரகயக்ஞம்
(12மணி ஆத்மசாந்தி மதியபோசனம்)

பிள்ளைகள்:
சிவஸ்ரீ. பூரணக்குருக்கள்
பிரமஸ்ரீ. வீரமணிஐயர்
பிரமஸ்ரீ. நாகேஸ்வரசர்மா
கேசவசர்மா
அகிலேஸ்வரசர்மா

மருமக்கள்:
பிரமஸ்ரீ. கிருஷ்ணர் குடும்பத்தினர்
பிரமஸ்ரீ. ஜெகதீஸ்வரர் குடும்பத்தினர்
சிவஸ்ரீ. சபாரத்தினசர்மா குடும்பத்தினர்
பிரமஸ்ரீ. சண்முகநாதசர்மா குடும்பத்தினர்
பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்.

இந்திர அம்மன் கோவிலடி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி. (312)

# புலிகளின் அரசியல் விவகார குழு

# அடுத்த மாதம் ஐரோப்பா பயணம்!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் அடுத்தமாதம் ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரியவருகின்றது.

நோர்டிக் நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொண்ட அரசியல் விவகாரக்குழுவினர், கடந்த ஞாயிற்றுக்கிழமை வன்னிக்குச் சென்றிருந்தனர். இவர்கள் இரண்டாவது சுற்றுப் பயணத்தை ஐரோப்பிய நாடுகளுக்கு மேற்கொள்ளவுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட சில ஐரோப்பிய நாடுகளில் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்பட்டமுறை, அரசியலமைப்புமுறை, சிறுபான்மையினருக்கான தீர்வு வழிமுறைகள் ஆட்சிமுறைகள் என்பன குறித்து புலிகளின் அரசியல் விவகாரக்குழுவினர் ஆராய்வர்.

இந்தக் குழுவில் 21 பேர் அடங்கியிருப்பது தெரிந்ததே.

## நெல்லியடி வாடிக்கையாளர்களுக்கு பரிசுகள்

(நெல்லியடி)

இலங்கை வங்கி - நாடு முழுவதும் நடாத்திய மெகா பரிசுத்திட்டத்தின் கீழ் - நெல்லியடிக் கிளை வாடிக்கையாளர் இ.சிவானந்தராஜா மோட்டார் சைக்கிள் ஒன்றினைப் பரிசாகப் பெற்றுள்ளார்.

இதேவேளை -

இக்கிளையில் 9 பேருக்குத் தங்கச் சங்கிலியும், 7 பேருக்குத் துவிச்சக்கரவண்டிகளும், 4 பேருக்கு காஸ் அடுப்புக்களும் பரிசாகக் கிடைத்துள்ளன.

இவர்களுக்கான பரிசுகள் வழங்கும் வைபவம் புதுவருடத்தினத்தன்று நெல்லியடி இலங்கை வங்கிக் கிளையில் நடைபெற்றது. (13)

# சமாதான முயற்சிகளுக்கு இந்தியா ஆதரவு தரும்!

## வொஷிங்ரன் மாநாட்டில் இந்தியத் தூதுவர்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வரும் சமாதான முயற்சிகளை இந்திய அரசாங்கம் முழுமனதுடன் வரவேற்பதாக வோஷிங்ரனில் நடைபெற்ற இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் முன்னோடிக் கூட்டத்தில் உரையாற்றிய அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவர் லலித் மான்சிங் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் அவர் மேலும் உரையாற்றுகையில் - இலங்கையுடனான உறவுகளை இந்தியா தொடர்ந்தும் மேம்படுத்தி வருகிறது என்றும், அண்மையில்கூட 200 மில்லியன் ரூபாவுக்கான உதவித்திட்டத்தை இலங்கைக்கு வழங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார்.





பாஷையூர் யுப்பிற்றஸ் குறூப் நடத்திய 7 பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்ற செவன் அப் கோலா அணித்தலைவர் எஸ். லதீஸ், திருமதி அன்ரனி வின்சனிடமிருந்து வெற்றிக் கிண்ணத்தைப் பெறுவதை முதலாவது படத்திலும்

இறுதி ஆட்டத்தில் சிறந்த வீரராகத் தெரிவுசெய்யப்பட்ட தி.அன்ரனி, திருமதி அன்ரனி வின்சனிடமிருந்து பரிசினைப் பெற்றுக் கொள்வதை இரண்டாவது படத்திலும் காணலாம். (119)

## மட்டக்களப்பு நகரத்தில்

# புலனாய்வாளர் சுடப்பட்டதையடுத்து படையினரால் 3 இளைஞர்கள் கைது!

மட்டக்களப்பு நகரில் நேற்றுமுன்தினம் காலை இராணுவப் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர் ஒருவர் இனந்தெரியாத நபரால் சுடப்பட்டதையடுத்து, மூன்று இளைஞர்களை இராணுவத்தினர் கைதுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

நேற்றுமுன்தினம் காலை புனித மைக்கேல் கல்லூரிக்கு முன்பாக இராணுவப் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தரான லான்ஸ் கோப்ரல் பரமானந்தம் ரவிக்குமார் என்பவர் சுடப்பட்டார். படுகாயமுற்ற இவர், கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இவர் முன்னர் புளொட் அமைப்பில் இருந்தவர் என்றும், தற்போது இராணுவப் புலனாய்வுத்துறையில் இணைந்து லான்ஸ் கோப்ரலாக பணியாற்றி வருவதாகவும் தெரியவருகிறது.

இவர் சுடப்பட்டதையடுத்து, அப்பகுதியைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் மூன்று இளைஞர்களைக் கைதுசெய்தனர். கணேசமூர்த்தி பகீரதன், சிதம்பரப்பிள்ளை துஷ்யந்தன், ஞானப்பிரகாசம் ஆகிய மூவருமே இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு, பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களைப் பொலிஸார் விசாரித்து வருவதாகவும் தெரியவருகிறது.

# தமிழ்க் கைதிகள் இடமாற்றம்; சிறை அதிகாரிகள் அசமந்தம்!

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளில் ஐந்து பேரை வட-கிழக்குப் பகுதிகளில் உள்ள சிறைச்சாலைகளுக்கு மாற்றும்படி சட்டமா அதிபர் திணைக்களம் பணிப்புரை விடுத்திருந்தபோதும், இருவர் மட்டுமே இவ்வாறு இடமாற்றப்பட்டுள்ளனர்.

ஐவரையும் இடம் மாற்றுமாறு சிறைச்சாலைத் திணைக்களத்துக்கு - சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்திருந்தது. ஆனால், சிறைச்சாலைத் திணைக்களம் இந்த விடயத்தில் அக்கறையற்றிருப்பதாகவும், இடமாற்றம் செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட மூவர் தொடர்ந்தும் களுத்துறைச் சிறையிலேயே தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

# சிறையிலுள்ள மாணவரின் பெற்றோர் மகிந்த ராஜபக்ஷவிடம் முறைப்பாடு

(கொழும்பு)

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் மாணவர் ஒருவர் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாகச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் மாணவர்களின் பெற்றோர்கள் - எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தனர்.

தமது பிள்ளைகள் ஐந்து மாதங்களுக்கு மேலாகச் சிறையில் இருப்பதாகவும், நீதித்துறையினர் இதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை எனவும் அவர்கள் எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷவிடம் புகார் செய்தனர்.

இந்த விடயம் நீதிமன்ற விசாரணையில் இருப்பதால் தம்மால் ஒன்றும் செய்யமுடியாது என்றும், மாணவர்களை இதிலிருந்து காப்பாற்ற வேண்டுமானால் வழக்குக்கு நல்ல சட்டத்தரணியை ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் மகிந்த ராஜபக்ஷ - பெற்றோருக்கு அறிவுரை கூறியதாகத் தெரியவருகின்றது.

# ஜெயலலிதா ஆட்சியைக் கலைக்க எதிர்க்கட்சிகள் வியூகம் வகுப்பு!

தமிழகத்தில் ஆட்சியிலுள்ள ஜெயலலிதா அரசாங்கத்தைப் பதவியிலிருந்து நீக்குவது தொடர்பாகத் தமிழக எதிர்க்கட்சிகள் கலந்துரையாடல்களை நடத்த ஆரம்பித்துள்ளன.

தமிழகத்தில் மோசமான ஆட்சி நிலவுவதாகவும், 'பொடா' சட்டத்தை முறைகேடாகப் பயன்படுத்துவதாகவும் தமிழக எதிர்க்கட்சிகள் விமர்சித்து வருகின்றன.

ஜெயலலிதா ஆட்சியை அகற்றுவது தொடர்பாக ஆராய்வதற்காக தி.மு.க தலைவர் மு.கருணாநிதியைப் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் கடந்த திங்கட்கிழமை சந்தித்துப் பேசியிருந்தார்.

இந்தச் சந்திப்பின்போது ஜெயலலிதா ஆட்சியை அகற்றுவதற்கு காங்கிரஸ் கட்சியின் ஆதரவு அவசியம் என வலியுறுத்தப்பட்டதாகவும், இது தொடர்பாக ஆராய்வதற்கு அனைத்துக்கட்சிக் கூட்டம் ஒன்றை எதிர்வரும் 24 ஆம் திகதி நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோவை நாளை மறுநாள் மு.கருணாநிதி சந்தித்துப் பேசவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## படகில் குண்டுவெடித்து மீனவர் ஒருவர் பலி!

மன்னார்க் கடற்பரப்பில் டைனமட்டைப் பயன்படுத்தி, மீன்பிடிக்க முற்பட்ட மீனவர் ஒருவர் அது வெடித்துப் பலியானார்.

மன்னார் - புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 36 வயதான மீனவரே படகில் குண்டுவெடித்து மரணமானார். இவரது படகும் சேதமடைந்து நீரில் மூழ்கியது. இந்தப் படகில் இருந்த மேலும் இரண்டு மீனவர்கள் பலத்த காயமுற்ற நிலையில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# ஒடுக்குமுறைகளுக்கு எதிராக உரத்துக் குரல் கொடுங்கள்!

## புதிய ஜனநாயகக் கட்சி மேதினத்துக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் மேதினத்தை வழமை போன்று புதிய ஜனநாயகக் கட்சி-யாழ்ப்பாணத்திலும், மலையகத்திலும் விரிவான அளவில் நடாத்தத் தீர்மானித்துள்ளதாகவும், உலகத் தொழிலாளர்களின் புரட்சிகரப் போராட்ட நாளான மேதினத்தில் பேரினவாத ஒடுக்குமுறை, பெருமுதலாளித்துவ ஆட்சியின் தொழிலாளர் விரோத, மக்கள் விரோத நடவடிக்கைகள், உலக மயமாதல், தனியார் மயமாதல், ஈராக் அணி மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பு என்பவற்றுக்குக் கடும் கண்டனத்தையும், எதிர்ப்பையும் தெரிவித்து மக்களை அணிதிரளுமாறும் புதிய ஜனநாயகக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

புதிய ஜனநாயகக்கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்தில்வேல், மத்திய குழு சார்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த ஒருவருடகால யுத்த நிறுத்தமும், பேச்சுவார்த்தை முயற்சிகளும் வடக்கு-கிழக்கு உட்பட நாடு முழுவதற்கும் நிம்மதியைத் தந்துள்ளபோதிலும், நியாயமான அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் பின்னடிக்கப்பட்டே வருகின்றன. பேரினவாத யுத்த வெறியர்களும், அயல் அந்நிய சக்திகளும் பேச்சுவார்த்தையைக் குழப்ப இடமளிக்காதவகையில் அரசியல்தீர்வுக்கான பேச்சுவார்த்தையைத் தாமதமின்றி ஆரம்பிக்க வேண்டும்.

அதேவேளை இன்றைய ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னுக்குக் காட்டி அதன் மறைவில் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் அனைவருக்கும் எதிராக எடுத்துவரும் பல்வேறு நடவடிக்கைகளை எமது கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

ஏகாதிபத்திய உலகமயமாக்கல் திட்டத்தின் கீழ் தாராளமயம், தனியார் மயம் என்பவற்றின் ஊடாக நாட்டின் பொருளாதார, அரசியல், சமூக பண்பாட்டுத் துறைகள் அனைத்தும் படுபயங்கர நாசங்களை நோக்கி இழுத்துச் செல்லப்படும் அபாயங்களை மக்கள் அடையாளம் கண்டு எதிர்த்து நிற்கவேண்டியது அவசியமாகின்றது.

உலக மக்களதும், நாடுகளதும் கடுமையான எதிர்ப்பையும், கண்டனத்தையும் மீறி அமெரிக்கா தலைமையில் ஈராக் மீது நடாத்தப்பட்ட அப்பட்டமான ஆக்கிரமிப்பு வன்மையாக எதிர்க்கப்படவேண்டியதாகும். இன்றைய ஈராக் மீதான ஆக்கிரமிப்பு நாளை இலங்கையிலும் குறிப்பாக வடக்கு - கிழக்கிலும் நிகழ்த்தப்படலாம்.

ஆதலால் எதிர்வரும் மேதினத்தில் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் அனைவரும் செங்கொடியின் கீழ் அணிதிரண்டு சகல ஒடுக்கு முறைகளுக்கு எதிராகவும் உறுதிமிக்க எதிர்ப்புக் குரலை முன்வைக்க முன்வர வேண்டும் என்ற அறைகூவலைப் புதிய ஜனநாயகக்கட்சி விடுக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# படைநிலை மீது கிரனைட் வீச்சு; வவுனியாவில் பெண் காயம்!

வவுனியா, ஈரப்பெரியகுளம் இராணுவச் சோதனை நிலையத்தின் மீது கிரனைட் வீசப்பட்ட சம்பவம் ஒன்றில் பெண் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றது. இத்தாக்குதலை யார் நடத்தினார்கள் என்பதோ, யாரை இலக்குவைத்து தாக்குதல் நடத்தப்பட்டது என்பதோ தெரியவில்லை எனப் படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகிறது.

# 'சுபானு' புத்தாண்டு உங்களுக்கு எப்படி

## மிதுனம்

மிருகசீரிடம் 3 ஆம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3 ஆம் பாதம் முடிய

**உங்கள் விசேட தனித் திறன்கள்:** பண்பு, செய்கையில் நிதானம், பொறுமை, புத்தகங்களில் ஆர்வம், வசீகரமுகம், பார்வை, இரக்க குணம், இனிமையாகப் பேசுவது.

**உங்கள் பலவீனம்:** அளவிற்கு மீறிய நிதானம், பொறுமை, கண்டிப்பு இல்லாதது. முக்கிய முடிவுகள் எடுப்பதில் அதிக தாமதம், தயக்கம், காரணமற்ற அச்சம், மனவுறுதிக் குறைவு.

**புத்தாண்டுப் பலன்கள்:**

14.04.2003 முதல் 16.08.2003 வரை

**குடும்பம்:**

மிதுனராசி அன்பர்களுக்கு, ஏழரைச் சனியில் ஜென்மச்சனி ஆரம்பமாகிறது. குருபகவான் ஜூலை மாதம் கடைசி வாரம்வரை அனுகூலமாக இருக்கிறார். அதன் பிறகு ஏற்படும் குரு சஞ்சாரத்தினால் நன்மை ஏற்படாது. குடும்பப் பொறுப்புக்களினாலும், குடும்பத்தில் ஏற்படும் சுபநிகழ்ச்சிகளினாலும் அதிக அலைச்சலும், கடின உழைப்பும் இருக்கும். அதனால், அடிக்கடி உடல் ஆயாசமும், உடல் உபாதைகளும், அசதியும் ஏற்படும். சிறு சிறு விஷயங்களுக்கும் கோபம் வரும். குருபகவானின் சுபபலத்தினால், குடும்பத்தில் ஒற்றுமையும், பரஸ்பர அன்னியோன்னியமும் நிலவும். திருமண முயற்சிகள் கைகூடும். குழந்தைகளின் படிப்பில் சிறந்த முன்னேற்றம் உண்டாகும். சிலர் பூர்வீகச் சொத்துக்களை விற்கவேண்டிவரும். பணவசதி நல்லபடி இருக்கும். எனினும், சுபச் செலவுகளும் அதிகமாக இருக்கும். வெளியூர்ப் பயணங்களினால் பணம் விரயமாகும்.

**உத்தியோகம், தொழில், வியாபாரம்:**

உத்தியோகத்தர்களுக்குப் பொறுப்புகள் கூடும். வேலைச்சுமை அதிகரிக்கும். மேலதிகாரிகளினால் தொல்லைகள் ஏற்படும். சிலருக்கு அவர்களது விருப்பத்திற்கு மாறாக இடமாற்றம் ஏற்படுவதற்கும் சாத்தியக்கூறு உள்ளது. அதனை ஒப்புக்கொள்வது நல்லது எனக் கிரக நிலைகள் சுட்டிக்காட்டுகின்றன. வெளிநாடுகளில் வேலைபார்த்து வரும் மிதுன ராசியினருக்கு மன நிம்மதி குறையும். வேலைப்பளு அதிகரிக்கும். ஒரு சிலருக்கு நிறுவன மாற்றமும் ஏற்படும். சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடும், அதனால் சிரமங்களும், அமைதிக் குறைவும் ஏற்படும். தொழிற்துறைப் பிரமுகர்களுக்கு அரசாங்கத்தினால் தொல்லைகள் ஏற்படும். வருமான வரி, தொழிற்சாலை அதிகாரிகள் ஆகியோரால் பலவித சிரமங்களும், சிலருக்கு நீதிமன்றம் செல்ல வேண்டிய நிர்ப்பந்தமும் உண்டாகும். இருப்பினும், உற்பத்தி பாதிக்கப்படாது. ஏற்றுமதித் துறையினருக்கு இலாபம் அதிகரிக்கும். வர்த்தகத் துறை அன்பர்களுக்கு விற்பனை முன்னேற்றம் அடையும். ஆனால், போட்டிகளும் கடுமையாக இருப்பதால் ஓய்வின்றி உழைப்பும், அலைச்சலும், வெளியூர்ப் பயணங்களும் ஏற்படும். விற்பனைவரி அதிகாரிகள் தொல்லை தருவார்கள். சக கூட்டாளிகளினால் சிரமங்கள் ஏற்படும்.

**அரசியலில் ஈடுபடுவோர்:**

கட்சியில் செல்வாக்குப் பாதிக்கப்படும். மேலிடத்தின் ஆதரவு குறையும். ஒரு சிலருக்கு வீண் அபவாதமும் ஏற்படக்கூடும். வருமானம் குறைய வாய்ப்பில்லை. தசா புக்திகள் கடுமையாக இருப்பின், கட்சி மாறுவதற்கும் சாத்தியக்கூறு உள்ளது. அல்லது அரசியலிலிருந்து ஓய்வுபெறக்கூடும். அரசாங்கப் பதவி ஒன்றை எதிர்பார்த்து, முயற்சி செய்துவந்த வாய்ப்பு கை நழுவிப் போகும்.

**மாணவமணிகள்:**

படிப்பில் முன்னேற்றம் தடைப்படாது. அடிக்கடி ஏதாவது ஓர் ஆரோக்கியக்குறைவு, உடல் உபாதைகள் என்று ஒன்று மாறி ஒன்று ஏற்படும். உடனுக்குடன் குணமும் ஆகும். வித்யா (கல்வி) ஸ்தானத்திற்குப் பாதிப்பு ஏற்படவில்லை. ஆதலால், ஆண்டுத் தேர்வில் வெற்றி பெறுவீர்கள். இருப்பினும், உயர்ந்த மதிப்பெண்கள் பெறுவதற்கு நீங்கள் கடுமையாக உழைக்கவேண்டியிருக்கும். வெளிநாடு சென்று உயர்கல்வி படிக்க ஆர்வம் இருப்பின் அதற்காக முயற்சி செய்யலாம். ஆனால், அதற்குப் பல தடங்கல்கள் ஏற்பட்டு, அதன் பிறகே உங்கள் முயற்சி கைகூடும்.

**விவசாயத்துறையினர்:**

வயலில் விவசாயப் பணிகள் கடுமையாக இருக்கும். உழைப்பிற்கு ஏற்ற விளைச்சல் இராது. ஆடு, மாடுகள் விருத்தி அடையும். அவற்றால் செலவுகள் அதிகரிக்கும். அடிப்படை வசதிகளான தண்ணீர், உரம் போன்றவற்றின் தட்டுப்பாடு குறையும். சிலர் ஆரோக்கியக் குறைவினால், வயல்பணிகளை நேரில் கவனிக்க முடியாமல், அடிக்கடி ஓய்வு எடுக்கவேண்டிய அவசியம் உண்டாகும்.

**பெண்மணிகள்:**

குடும்பப் பொறுப்புகளினால்- அலைச்சல், உழைப்பு அதிகரிக்கும். பெண் அல்லது பிள்ளை ஆகியோரின் விவாக சம்பந்தமான சுபநிகழ்ச்சிகளும், உறவினர்கள் வருகையும், ஓய்வில்லாத உழைப்பையும், பொறுப்புக்களையும் ஏற்படுத்தும். அதனால, ஆயாசமும், வெறுப்பும், விரக்தியும் உண்டாகும். வேலைக்குச் செல்லும் பெண்கள், அலுவலகத்தில் புதிய பொறுப்புகளை ஏற்கவேண்டியிருக்கும். மேலதிகாரிகளால் சிரமங்கள் உண்டாகும். புதியவேலைக்கு முயற்சிசெய்யும் மிதுன ராசி சகோதரிகளுக்குத் தடங்கல்கள் உண்டாகும்.

**ஆரோக்கியம்:**

ஜென்ம ராசியில் சனியும், விரய ஸ்தானத்தில் ராகுவும் சஞ்சரிக்கின்றனர். இத்தகைய கிரக நிலை, ஆரோக்கியத்தைப் பாதிக்கக்கூடும் என்றும், அதிக அலைச்சலையும், உழைப்பையும் ஏற்படுத்தும் எனவும் மிகப் புராதனமான ஜோதிடநூல்கள் விவரித்துள்ளன. ஆதலால், இத்தருணத்தில் மிதுன ராசியினர், உடல்நலன் பற்றிச் சற்று அதிக கவனமாக இருத்தல் அவசியம். அடிக்கடி உடற்பரிசோதனை செய்துகொள்வதும், முடிந்தபோதெல்லாம் ஓய்வு எடுபபதும் உதவும். நீரிழிவு, இதய சம்பந்தமான கோளாறுகள், சிறுநீரகத்தில் கற்கள் உள்ளவர்கள், ரத்தக் கொதிப்பு உள்ளவர்கள் மருத்துவப் பரிசோதனை செய்துகொள்வதும், மருந்துகளைத் தவறாமல் சாப்பிடுவதும், உணவு விஷயங்களில் கவனமாக இருத்தலும் அவசியம். சிறு உடல் உபாதையானாலும், அதனை அலட்சியப்படுத்தாது, மருத்துவ ஆலோசனை பெறுவது நல்லது எனக் கிரகநிலைகள் அறிவுறுத்துகின்றன.

**பொருளாதாரம்:**

தன ஸ்தானம் சுபபலம் பெற்றிருப்பதால், பணவசதி ஓரளவு நல்லபடியே உள்ளது. ஆயினும், இதற்குச் சமமாக விரய ஸ்தானமும் பலம் பெற்றிருப்பதால், சுபச் செலவுகள் மிக அதிகமாக இருக்கும். விவாகம், ஆண்டு நிறைவு, என்று பணம் செலவழிந்து கொண்டே இருக்கும். சேமிப்பிற்குச் சாத்தியக்கூறு கிடையாது. பணம் பல வழிகளிலும் விரயமானாலும், சமாளித்துவிட முடியும். வருமானம் திருப்திகரமாக இருப்பதால், லாபஸ்தானத்திற்கு ராகு மாறுவது நல்லது.

தமிழ்நாட்டின் பிரபல
சோதிட சக்கரவர்த்தி
**ஏ.எம்.இராஜகோபாலன்**

**17.08.2003 முதல் 12.04.2003 வரை**

இதுவரை கடகத்தில் உச்ச சுபபலம் பெற்றிருந்த குரு பகவான், இப்போது உங்கள் ராசிக்குத் திருதீய ஸ்தானமான சிம்மத்திற்கு மாறுவது அனுகூலத்தைத் தராது. குடும்பத்தில் பல பிரச்சினைகள் தலைதூக்கும். பல மாதங்களுக்குப் பிறகு இப்போது முதன் முறையாகப் பணத் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளது. மருத்துவச் செலவுகளும் ஏற்படக்கூடும். ராகுவின் நிலையினால், அவ்வப்போது ஏற்படும் நெருக்கடித் தருணங்களில் உதவிகள் கிடைக்கும். சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய அவசியமும் ஏற்படும். உத்தியோகம், தொழில், வியாபாரம் ஆகியவற்றிலும் அவரவரது துறைகளில் பலவித சிரமங்கள் ஏற்படும். வருமானத்தைவிடச் செலவுகளே அதிகமாக இருக்கும். சிலர், நீதிமன்ற வழக்குகள், காவற்துறையினரால் பிரச்சினைகள் ஆகியவற்றில் சிக்கிக் கொள்வார்கள். பண விஷயத்தில் எவரையும், இத்தகைய தருணங்களில் நம்பாமல் இருப்பது நன்மைதரும். ராகு 11- இல் சஞ்சரிப்பதாலும், அவருக்குச் சிம்ம ராசியில் சஞ்சரிக்கும் குருபகவானின் சுபபலம் பெற்ற பார்வை கிடைப்பதாலும், அவ்வப்போது சிரமமான சந்தர்ப்பங்களில், நீங்களே எதிர்பாராத உதவிகள் தக்க தருணத்தில் தேடிவரும். பாக்ய ஸ்தானத்திற்கும் குருபகவானின் சுபப் பார்வை கிடைக்கிறது. கிரகங்களுக்கு நான்கு வகை பலம் மிகப் பழமையான நம் ஜோதிட நூல்களில் கூறப்பட்டுள்ளன. அவை ஸ்தான பலம், ஆதி பத்ய பலம், சேர்க்கைப் பலம், திருஷ்டி (பார்வை) பலம். இவை நான்கிலும், பார்வை பலமே அதிக வீரியம் பெற்றதாகும். ஆதலால் குரு பகவான் சிம்ம ராசியிலிருந்து உங்கள் ராசிக்குக் களத்திர, பாக்ய, லாப ஸ்தானங்களைப் பார்ப்பது, ஜென்மச் சனி நடைபெறும் இக் காலகட்டத்தில், உங்களுக்குச் சிரமத்தைக் குறைத்து, சிறந்த நற்பலன்களை அளிக்கவல்லது. மனைவிக்கும் ஆரோக்கியக் குறைவு ஏற்பட்டு, தக்க சிகிச்சையினால் குணம் அடைவார். குழந்தைகள் விஷயத்திலும் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு பின்பு நிலைமை சீர்படும். தொடர்ந்து, உங்கள் ஆரோக்கியத்தில் கவனமாக இருத்தல் வேண்டும். கூடியவரையில், திட்டமிட்டுச் செலவு செய்தால், பண நெருக்கடி ஏற்படாமல் இருப்பதற்கு உதவும்.

(கடக ராசி நாளை)

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் 300 வீடுகளை அமைக்க திட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மீளக் குடியமர்ந்த மக்களுக்கு 300 வீடுகளைக் கட்டிக் கொடுக்க நிக்கொட், ஜி.ரி.இசற் ஆகிய நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி ஆகிய பகுதிகளுக்கே இவ்வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. நிக்கொட் நிறுவனம் 125 வீடுகளையும், ஜி.ரி.இசற் நிறுவனம் 175 வீடுகளையும் கட்டிக்கொடுப்பதற்கு முன்வந்துள்ளன.

இந்த வீடுகள் சொந்தக் காணி உள்ளவர்களுக்கும், அரசாங்கக் காணி என்றால் உறுதியுள்ளவர்களுக்கும், கோயில் காணிகளென்றால் 20 வருடங்களுக்கு மேல் குத்தகை பெற்றிருக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (17)

# கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள்.. பளை காவற்பணிமனையில் ஒப்படைப்பு!

ஒரு தொகுதி தேசிய, விசேட அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு பளை காவற்துறைப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் பளை காவற்துறைப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனப் பணிமனைப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பத்மநாதன் பரமோதயன் (வட்டக்கச்சி), கிருஷ்ணசாமி தேவரஞ்சினி (கிளிநொச்சி), கிறிஸ்ற்றின் சந்திராதேவி (யாழ்ப்பாணம்), கணேசமூர்த்தி விஜயகுமார் (ஏறாவூர் 04), நடராசா நாகேஸ்வரன் (கிளிநொச்சி), வேலுப்பிள்ளை முருகேசு (யோகபுரம்), சிவயோகவதி ஐயாத்துரை (கண்டாவளை), பொன்னையா வாகீசன் (கோப்பாய் மத்தி), பொன்னுத்துரை சின்னராசா (மட்டுவில்), மீனம்மா சுப்பிரமணியம் (நல்லூர்), சின்னத்தம்பி பத்மநாதன் (முரசுமோட்டை),

ஞானசேகரம் அருட்செல்வம் (ஏழாலை), சின்னப்பொடியன் அருமைத்துரை (முள்ளியான்), கொன்ஸ்ரன்ரைன் மேரிசைலா (யாழ்ப்பாணம்), முத்துலிங்கம் துரைச்சாமி (கைதடி), தம்பிஐயா வாகீசன் (சரசாலை வடக்கு), தம்பையா ஆனந்தராஜா (உரும்பிராய் மேற்கு), அன்னலட்சுமி கனகரத்தினம் (கோப்பாய் வடக்கு), குணரத்தினம் புனிதா (மறவன்புலவு மேற்கு), முத்துப்பிள்ளை சுப்புக்குட்டி (மந்துவில்), றோசம்மா சூசைப்பிள்ளை (அச்சுவேலி), சின்னராசா பிரதீபன் (உடுவில்), மகேசகுமார் (தாவடி), வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் (இயற்றாலை), சந்தானலட்சுமி தாமோதரம்பிள்ளை (புங்குடுதீவு மேற்கு), கந்தசாமி லலிதாம்பாள் (உருத்திரபுரம்), பரசுராமன் டேவிற் (தம்பலவத்தை)

வாப்புக்குட்டி நஸீர் (நிலாவெளி), பெருமாள் செல்வகுமார் (திருநகர்), வீமன் பிரகானந்தன் (பண்ணாகம்), தியாகராசா தவமணி (மண்டைதீவு), இராசதுரை வரன் (புன்னாலைக்கட்டுவன்), இரசேந்திரம் பாஸ்கரன் (புலோலி தெற்கு), அந்தோனி இக்னேசியஸ் யேசுநேசன் (கோட்டைக் கல்லாறு), சிவசுப்பிரமணியம் சிவநேசன் (துட்சாணாமருதமடு), இ[illegible]சையா செல்வநாயகி (கண்[illegible]வளை), மாணிக்கம் நடராசா (திருகோணமலை),

முகம்மது ஸாதிக் முகம்மது பர்வின் (திருகோணமலை), த.செல்வரத்தினம் (பளை), த.கலைச்செல்வி (மல்லாவி), ஐயாத்துரை தில்லையம்பலம் (கிளாலி), செல்வரத்தினம் செல்வநாயகி (கொட்டடி),

கணேசன் சிவபாக்கியம் (முகமாலை வடக்கு), க.பாலசிங்கம் (ஸ்கந்தபுரம்), த.மரியசெல்வம் (அளம்பில்), சேனாதிராசா ரவீந்திரராசா (சங்கானை), ம.பிறேமலோஜினி (புதுக்குடியிருப்பு), தேவகிருஸ்ணநேசன் (பூந்தோட்டம்), கார்த்திகேசு சந்திரசேகரம் (சாவகச்சேரி )

ஆகியோரின் அடையாள அட்டைகளே பளை காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

வாழ்க வளமுடன்
HAPPY BIRTHDAY
ஆறாவது அகவையில்



பெயர் :அ.மதுஷாந்
முகவரி: இராஜேஸ்வரி வீதி, அரியாலை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்
சிறாரின் பெயர்:----------------
முகவரி :----------------
பிறந்த ஆண்டு:----------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
----------------
பெற்றார் ஒப்பம்

# ஒன்பது கிராம அலுவலர் பிரிவுகளில் 9600 வீடுகள் யுத்தத்தால் சேதம்!

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பகுதிகளில், சுமார் 9 ஆயிரத்து 600 வீடுகள் கடந்த கால யுத்தத்தால் சேதமடைந்துள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது 9 கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் மீள்குடியமர்ந்துள்ளனர். இப்பிரிவுகளில் திரட்டப்பட்ட புள்ளிவிபரங்களிலிருந்தே இந்த விபரங்கள் தெரியவந்துள்ளன.


மேலும் நாகர்கோயில் மேற்கு, நாகர்கோயில் கிழக்கு, நாகர்கோயில் தெற்கு கிராம சேவையாளர் பிரிவுகள் உயர் பாதுகாப்பு வலயம் எனக் காரணங்காட்டி மீளக்குடியமர்த்துவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

இதனால், மேற்படி பகுதிகளில் வீடுகளில் ஏற்பட்ட சேதங்களைப் பற்றி மதிப்பீடு செய்யமுடியவில்லை எனப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மாமுனை தொடக்கம் கேவில் வரையான பிரதேசத்தில் 3500 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன. மீளக்குடியமர்ந்த மக்களுக்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித்திட்டங்கள் தயாரித்து நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

மீளக்குடியமர அனுமதிக்கப்படாத மூன்று கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 1500 குடும்பங்கள் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள தனியார் வீடுகளிலும், நலன்புரி நிலையங்களிலும் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வருகினறார்கள். இடம்பெயர்ந்த குடும்பங்களில் 1250 குடும்பங்கள் கடற்தொழிலையே நம்பி வாழ்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# மூன்றாம் உலக நாடுகளின் கிராமிய வறுமையின் பண்புகளும் வறுமைத் தணிப்பு முயற்சிகளும்



இந்நாடுகளது கிராமிய விவசாயத்தின் பண்புகள் பற்றி நோக்குமிடத்து - இங்கு சிறுநில உடமையாளர்களும், குத்தகையாளர்களும் தமது விவசாய நிலங்களைவிட்டு வெளியேறுவதற்கான அழுத்தங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. தவிர, இத்தகைய வறிய விவசாயிகள் தமது வறுமையுடன் போராடுவதற்கும், அதனைக் குறைப்பதற்குமென எல்லாவகையான தந்திரோபாயங்களையும் கையாளுகின்றனர். இந்நாடுகளின் கிராமிய வறுமைக்குட்பட்டவர்கள் பால், இன, வயது, வசிப்பிடம் மற்றும் வருமான மூலம் என்பவற்றைப் பொறுத்து வேறுபட்டிருந்தனர். அதிகமாக வறுமையினால் பெண்களும், சிறுவர்களுமே பாதிக்கப்பட்டிருந்தனர். அதேபோல, சமூகத்தைப் பொறுத்து சிறுபான்மையின மக்கள் - பெரும்பான்மையின மக்களைவிட அதிகம் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், கிராமிய வறியவர்கள் - நகர வறியவர்களைவிட அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் கிராமிய வறியவர்களுக்கிடையில் இதை நோக்குமிடத்து, நிலமற்ற கூலித்தொழிலாளர்கள் சிறுநில உடமையாளர்கள், குத்தகை விவசாயிகளைவிடவும் மோசமான நிலையிலேயே காணப்படுகின்றனர்.

வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் உருவாகும் வறுமை, அது வேறுபட்ட குழுவினர்மீது ஏற்படுத்தும் தாக்கம் என்பவை பற்றி விளங்கிக்கொள்வதற்கு, அவர்களிடமுள்ள சொத்துக்கள் (Assets) பற்றி ஆராய்வு செய்வது இன்றியமையாதது. இங்குள்ள கிராமிய விவசாயி ஒருவரால் எதிர்நோக்கப்படும் பொருளாதார நிர்ப்பந்தங்கள் - வீட்டுத்துறை, சமுதாயம் போன்ற பல்வேறு மட்டங்களிலுள்ள, பல்வேறு சொத்து மட்டங்களின் அளவினால் தீர்மானிக்கப்படுகின்றது. இந்நாடுகளில் வாழ்கின்ற வறிய விவசாயி ஒருவனது சொத்துக்கள் பல்வேறு வடிவங்களில் காணப்பட்டன.

குறிப்பாக - தனியாரதும், பொதுவுடமையாகவுமுள்ள நிலம் - நீர்வளம், காடு, மேய்ச்சல் நிலம் போன்றவற்றை உள்ளடக்கிய இயற்கை மூலதனம், இயந்திர சாதனங்கள், மூலதன உபகரணங்கள் மற்றும் தங்கம், காப்புறுதி சேமிப்பு மற்றும் கடன்பெறும் வாய்ப்புக்கள் போன்றவை சார்ந்த நிதி மூலதனங்கள் பல்வேறுபட்ட வயதெல்லைகளை உள்ள தொழிலாளர்கள், பால், ஊழியத்தின் வினைத்திறன் என்பவற்றுடன் தொடர்பான மனித மூலதனம், பொதுத்துறையாலும், தனியாராலும் வழங்கப்படும் தொடர்பு சாதனங்கள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வீட்டுத் துறையினதும், சமூகத்தினதும் சட்டப் பாதுகாப்பு உரிமைகள், தீர்மானம் மேற்கொள்வதில் அவர்களது பங்களிப்பு போன்றவற்றின் விரிவாக்கம் என்பவை உள்ளடங்கிய நிறுவன ரீதியான சொத்துக்கள் போன்ற பல்வேறு வடிவங்களிலுள்ள சொத்துக்களை இந்நாடுகளிலுள்ள ஒரு வறிய விவசாயி உடமையாகக் கொண்டிருப்பதைக் காணலாம். இவ்வாறு வரையறுக்கப்பட்ட வகையில் சொத்துக்களைக் கொண்டிருப்பது இந்நாடுகளது கிராமிய வறுமையின் உருவாக்கத்துக்கான காரணமாக அமைந்துவிடுகிறது.

அநேகமான வளர்முக நாடுகளின் கிராமிய வறியவர்களது பிறிதொரு வருமான மூலமாக, அவர்களது விவசாயத் தொழிலே அமைந்துள்ளது. பெரும்பாலான நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களின் தொழில் வாய்ப்புகள் விவசாயத்தின் ஊழியத்துக்கு நிலவுகின்ற பருவகாலக் கேள்வியிலேயே பெருமளவுக்குத் தங்கியுள்ளது. நிலமற்ற கிராமியத் தொழிலாளர்கள் தமது ஊழியத்துக்கான கேள்வி, கூலிவீதம் மற்றும் தமது உற்பத்திப் பொருட்களின் விலைகள் போன்றவற்றில் ஏற்படும் தளம்பல்களால் பலவீனமான நிலையையே அனுபவிக்கின்றனர். தவிர, இவர்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள், தமக்குரிய தேவைகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதில் சிறு நிலவுடமையாளர்களிலும் விட அதிகளவு கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர்.

ஏ.தயாபரன்,
விரிவுரையாளர்,
வவுனியா பல்கலைக்கழகம்.

மேலும் இவர்கள், பொதுத்துறையால் மேற்கொள்ளப்படும் உணவுப் பங்கீடு, உணவுப் பாதுகாப்புத் திட்டங்கள் போன்றவற்றிலிருந்து விலக்கப்படுகின்ற போக்கும் காணப்படுகிறது. அத்துடன், கிராமிய வறுமை இந்நாடுகளில் தீவிரமாக இருப்பதற்குக் கூறப்படும் மற்றொரு காரணம்- இங்குள்ள பெரும்பாலான சமூகங்களில் நிலவும் தரம் குறைந்த அந்தஸ்து என்பதாகும்.

கிராமிய வறுமையில் நிலவும் இன்னொரு அம்சமாக - வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் வாழும் கிராமியப் பெண்களே ஆண்களைவிட அதிகம் பாதிக்கப்படுவதுடன், பெரும்பாலான வறிய மக்கள் விசேடமாகப் பெண்கள் குறைந்தளவான வருமானம், குறைந்தளவான பாதுகாப்புடன்கூடிய தற்காலிகப் பருவகால வேலைவாய்ப்புகள் மற்றும் வேதனக் கொடுப்பனவுக்கான உத்தரவாதமின்மை போன்ற பல்வேறு சூழ்நிலைகளையும் சகித்து வாழ்பவர்களாகக் காணப்படுகின்றனர்.

ரஷ்யா, பொலிவியா மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் இத்தகையதொரு நிலையே காணப்படுகிறது. கம்போடியாவில் வாழும் ஒரு பெண் அங்குள்ள வறுமை பற்றிக் கூறும்போது - "ஒரு நாளில் 18 மணித்தியாலங்களுக்கும் மேலாக வேலை செய்தபோதும் - தனக்கும், தனது கணவனுக்கும், தங்களது இரு பிள்ளைகளுக்கும் போதுமான உணவைப் பெறுவதற்கான வருவாயைக்கூட ஈட்டமுடியவில்லை" என்றார்.

மூன்றாம் உலக நாடுகளில் நிலவும் மேற்கூறிய கிராமிய வறுமையின் பொருளாதாரப் பண்புகளுக்கு அப்பால் வேறும் சில பண்புகளைக் கொண்டு விளங்குவதைக் காணலாம். குறிப்பாக இந்நாடுகளின் வறிய மக்கள் தமது தெரிவுகளில் கட்டுப்பாட்டையும், தமக்கு விரும்பியதைச் செய்வதற்கோ, கேட்பதற்கோ உரிய தகுதியைக் கொண்டிராது இருந்து வருவதைக் காணலாம். அதாவது, அம்மக்கள் பல்வேறுபட்ட விடயங்களிலும் அதிகாரம் செலுத்தும் சக்தியற்றவர்களாக, அவற்றுடன் இணைந்த வகையிலான பிரதிகூலங்களுடன் மிக அதிகளவுக்குப் பிணைக்கப்பட்டவர்களாகக் காணப்படுவதால், அவர்களால் வறுமையிலிருந்து தப்புவது மிகவும் கடினமாகவுள்ளதைக் காணலாம். நைஜீரிய நாட்டு வயோதிபர் ஒருவரது கருத்துப்படி "நீ ஏதோ ஒன்றைச் செய்யவேண்டிய தேவை இருந்தாலும், அதைச் செய்வதற்கு உனக்கு சக்தியோ, ஆற்றலோ இல்லை" அதுவே வறுமை என்கிறார். ஈக்குவடோர் நாட்டு இளைஞர் ஒருவனது கருத்துப்படி - "நீ எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கமுடியாது. ஏனெனில், நிகழ்காலத்தில் நீ எவ்வாறு உயிா வாழ்கிறாய் என்பதை மட்டுமே உன்னால் பார்க்கமுடியும்" என்று வறுமை பற்றிக் குறிப்பிடுகையில் கூறுகின்றார்.

இவ்வாறாக இந்நாடுகளில் வாழும் வறியவர்களது சக்தியற்ற அல்லது அதிகாரமற்ற பல்வேறுபட்ட விடயங்களது, பல்வேறு பரிமாணங்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவகையில் தொடர்புபட்டுக் காணப்படுவதாலேயே அவர்கள் இன்னமும் வறுமையிலிருந்து தப்புவது என்பது ஒரு கடினமான விடயமாகக் காணப்படுகிறது.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் கிராமிய வறுமை உருவாவதற்கும், தொடர்ந்து அது நிலைத்து நிற்பதற்கும் பல்வேறு காரணிகள் பொறுப்பாகவுள்ளன.

குறிப்பாக, இந்நாடுகளில் நிலவும் அரசியலின் ஸ்திரமற்ற தன்மையும் நிர்வாகரீதியாக இடம்பெறுகின்ற போட்டிகளும் இதற்குக் காரணமாகின்றன. பல்வேறு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் கிராமிய வறுமை மற்றும் அது எவ்வாறு அங்கு உருவாக்கப்படுகிறது என்பது தொடர்பாகப் பல்வேறு ஆராய்ச்சிகள் இடம்பெற்று வந்துள்ளன.


(தொடரும்)

## தொழில்வங்கி



| நிறுவனம்:- | UNDP கண்ணிவெடி அகற்றும் பிரிவு | கிழக்குப் பல்கலைக்கழகம் | ACTION FAIM |
|---|---|---|---|
| வெற்றிடமாக உள்ள பதவிகள்:- | தகவல் உத்தியோகத்தர் | விரிவுரையாளர் (ஒப்பந்த அடிப்படை) மருந்தகவியல் (Pharmacy) | உதவித் திட்ட அலுவலர், கள உத்தியோகத்தர் |
| அடிப்படைத் தகுதி:- | க.பொ.த. (உ/த) (ஆங்கில அறிவு) | குறைந்தது மருந்தகவியலில் டிப்ளோமா மற்றும் தொழில் அனுபவம் | விவசாய விஞ்ஞானப் பட்டதாரி மற்றும் முன்னனுபவம் |
| விண்ணப்ப முடிவு திகதி | 23-04-2003 | 05-05-2003 | 25-04-2003 |

தொழில் வங்கியில் வரும் விடயங்கள் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர்-
" நமது ஈழநாடு"
அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.






## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | ஊர்காவற்றுறை | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 60/- | 40/- | 50/- | 70/- | 65/- | 100/- |
| உருளைக்கிழங்கு | 80/- | 60/- | 70/- | 70/- | 60/- | 65/- |
| கத்தரிக்காய் | 30/- | 40/- | 40/- | 50/- | 50/- | 50/- |
| பாகற்காய் | 80/- | 60/- | 60/- | * | 65/- | 70/- |
| வெண்டைக்காய் | 30/- | * | 10/- | 30/- | 35/- | 35/- |
| முருங்கக்காய் | 120/- | 160/- | 150/- | 120/- | 130/- | 140/- |
| கரட் | 40/- | 60/- | 40/- | 50/- | 60/- | 60/- |
| பீற்றூட் | * | 30/- | 25/- | 40/- | 40/- | 40/- |
| வெங்காயம் | 35/- | 30/- | 35/- | 30/- | 35/- | 50/- |
| பச்சைமிளகாய் | 40/- | 40/- | 30/- | 40/- | 40/- | 60/- |

# கடலக உணவுப் பொருளான

# கடலட்டையின் முக்கியத்துவம்

கடலட்டையானது ஆதிகாலந் தொட்டு எமது கடல்களில் பிடித்து உணவாக்கப்படும் கடல்வாழ் பிராணியாகும். இவைகளிலிருந்து தயாரிக்கப்படுகின்ற உணவு Beach de - mer என்று பிரெஞ்சு மொழியிலும் Trepang என்று மலாய் மொழியிலும் அழைக்கப்படுகின்றது. இந்த உணவுப்பொருளானது சீன மக்களால் பண்டிகைக் காலங்களிலும், விருந்து வைபவங்களிலும் பெரிதும் விரும்பி உண்ணப்படுகின்றது.

இது எமது நாட்டிலிருந்து சீன மக்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. ஆயினும் நம் நாட்டினருக்கு இது விரும்பியதொரு உணவாகக் காணப்படவில்லை.

பண்டைக்காலங்களில் சீனர் எமது கரையோரங்களிலும் மற்றும் மேற்குப் பசுபிக் சமுத்திரக் கடற்கரைகளிலும் இவற்றின் சுவை அறிந்து தேடி வந்தனர். அவர்களே இந்த வர்த்தகத்தை மேற்கொண்டு இப்பிரதேசங்களில் உற்பத்தி முறைகளைக் கையாண்டனர். சிங்கப்பூர், ஹொங்கொங், பினாங் ஆகிய நாடுகள், சீனர்களின் கடலட்டை வர்த்தகத்துக்குரிய மையங்களாக விளங்குகின்றன.

இற்றைக்கு உலகில் கிட்டத்தட்ட முப்பது நாடுகள் கடலட்டை உணவுப்பொருள் உற்பத்தி செய்யும் நாடுகளாக இருந்த போதிலும், இவற்றில் அரைவாசி நாடுகளே இவற்றை உணவாகக் கொள்கின்றன. எனவே, இந்நாடுகள் உற்பத்தி முழுவதையும் வேற்று நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்கக் கூடியதாகவுள்ளது. கடலட்டை உற்பத்தியில் எமது நாடும் உலகில் முன்னணியில் திகழும் நாடே. அது தனது உற்பத்தி முழுவதையும் ஏற்றுமதிசெய்து பயனடைகிறது. எமது கடல்களில் காணப்படும் கடலட்டை எனப்படும் உயிரினம் குறுகிய நீளமுடைய (20-40 cm) உருளை வடிவான உடலைக் கொண்டதும், அருவருக்கத்தக்க தோற்றம் கொண்டதுமான கடல் வாழ் உயிரினமாகும்.

கடலட்டை ஓர் அடித்தளவாழ் உயிரியாகும். இவ்வினம் கடலில் 2 m - 20 m ஆழம்வரையான, சேறு சேர்ந்த மணற்பாங்கான பகுதிகளிலும், கடற்படுக்கைகளிலும், இறந்த பவளப்பாறைப் பிரதேசங்களிலும் காணப்படுகின்றது. இவற்றின் பரம்பலானது உணவுத் தேவை, அலையடிப்பு என்பவற்றினால் தீர்மானிக்கப்படுகிறது. இவ்வினத்தில் 900 இனங்கள் காணப்படுகிறது. வாய், குதம் என்பன எதிர், எதிர்த்திசையில் காணப்படுகின்றன. இவை கறுப்பு, கபிலம், மெல்லிய பச்சை நிறமுடையன. இதன் உட்தோலானது மென்மையான கியூட்டிகிள் எனும் புறத்தோலினால் மூடப்பட்டுள்ளது. இவை பொதுவாக அடையல் அல்லது தொங்கல் உண்ணிகளாகும்.

இவை தூக்கங்களை வெளியே நீட்டி அடித்தளத்தின் மீது அசைப்பதனாலும், தூக்கங்களை உயர்த்தி நீரினுள் நீட்டுவதனாலும் உணவைப் பெற்றுக் கொள்கின்றன. இவற்றில் தனித்தனி சனனி காணப்படுகின்றது. இவ்வியல்பானது ஏனைய அங்கத்தவரிலிருந்து கடலட்டை வேறுபடுகிறது. அநேகமானவை இலிங்கம் வேறான இனங்களாகும். இவற்றுள் 30 முட்டையிடும் இனங்கள் காண்படுகின்றன. கடலட்டையின் இளம்பிராயம் 'ஓரிக்குளோரியா' எனச் சிறப்பாக அழைக்கப்படுகின்றது.

இவை கடலின் அடிப்பரப்பிலே ஆறுதலாக ஊர்ந்து திரிந்து, மண்ணிலுள்ள உணவுப் பதார்த்தங்களை உணவாகக் கொள்கின்றன. இலங்கையைச் சூழ்ந்த கடல்களில் கடலட்டைகளின் பல இனங்கள் உணவுப்பொருளாகப் பாவிக்கப்படக்கூடியனவாகக் காணப்பட்டாலும், ஏற்றுமதிக்குத் தயாரிக்கப்படும் உற்பத்திப் பொருளுக்காகப் பெருமளவு வெள்ளை அட்டை எனப்படும் Holo-thuria scabra இனமே பாவிக்கப்படு கிறது.


வெள்ளையட்டை ஆழமான கடல்களின் அடித்தளத்தில் ஆறுதலாக ஊர்ந்து செல்லும். முதுகுப்புறம் மஞ்சள் புள்ளிகளுடன்கூடிய கருமையான தோற்றத்தையும், வயிற்றுப்புறம் வெள்ளை நிறத்தையும் கொண்ட உயிரினமாகும். இது கையால் தொடும்போது சீதம் போன்ற வழுவழுக்கும் பதார்த்தத்தைச் சுரப்பதனால் வழுக்கிக்கொண்டுசெல்லும். அத்துடன், நீரிலிருந்து வெளியே எடுக்கும்போது, தனது உடல் உறுப்புக்களை முக்கியமாக குடலை வெளித்தள்ளி அருவருக்கச்செய்து தப்பிக்கொள்ளும். இவை கடலின் அடித்தளத்திலுள்ள உணவுப் பொருட்களை, கடல் மண்ணை உட்கொள்வதன்மூலம் பெற்றுக்கொள்கின்றன. இந்த வெள்ளையட்டைகளை நமது கடல்களில் சுழியோடி, அட்டை சேகரிப்போர் பிடித்துக் கடற்கரைக்குக்கொண்டு சென்று பதப்படுத்துகின்றார்கள். இதில் - துப்பரவாக்குதல், அவித்தல், புகைபோடுதல், காயவிடல் என்னும் செய்முறைகள் அடங்குகின்றன.

முதலில் அண்டா எனப்படும் பெரிய பாத்திரத்தில் கடல்நீர் கொதிக்க வைக்கப்படுகின்றது. நீர் கொதிக்கும்போது உடல் உறுப்புக்களை வெளித்தள்ளச் செய்து கழுவிய அட்டைகளை இதனுள் இட்டு 1 1/2 மணிநேரத்திற்கு அவிக்கின்றார்கள். பதமாக வேகவிடப்பட்ட அட்டைகள், கடினமான மேற்பரப்பில் போடப்படும்போது உந்தப்படுவதன் மூலம் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது. இவ்வட்டைகள் திரும்பவும் தூய கடல்நீரில் கழுவப்படுகின்றன.

கழுவப்பட்ட வெள்ளையட்டை வகைகள்- கடற்கரையில் சுத்தமான, ஈரலிப்புள்ள மண்ணில் புதைக்கப்படுகின்றன. இதனால் இதன் வெளித்தோல் இலகுவில் பிரிகையடைந்து கழற்றப்படுகின்றது. இவை மீண்டும் உரஞ்சிக் கழுவப்பட்டு அவிக்கப்படுகின்றன.

பதனிடும் முறையில் அடுத்த படியாக இவை, புகையிடப்படுவதன் மூலம் அல்லது சூரிய வெப்பத்தினால் காயவிடப்படுகின்றன. ஆயினும் புகையிடப்பட்டு காயவிடப்படுவதன் மூலமே தரம் வாய்ந்தவையைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. கண்டல் தாவரங்களின் வேர்கள் எரிக்கப்படும்போது உண்டாகும் புகையைப் பயன்படுத்தி அவித்த கடலட்டைகளுக்கு சுவையூட்டப்படுகின்றது.

இவ்விதம் தயாரிக்கப்பட்ட கடலட்டை தரப்படுத்தப்பட்டு, ஏற்றுமதி செய்யப் படுகின்றது. தரப்படுத்தலில் உற்பத்திப் பொருளின் பருமன், தன்மை, பாவிக்கப் பட்ட இனங்கள் என்பன முக்கிய காரணிகளாகும்.



பதப்படுத்தலில் எரிந்த, உலராத, உருவம் மாறுபட்ட, துளைகள் கொண்ட கடலட்டைகள் தரப்படுத்தப்படும்போது நிராகரிக்கப்படுகின்றன. மற்றும் தரம் வாய்ந்த கடலட்டைகள் ஏற்றுமதியாளர்களால் சேகரிக்கப்பட்டு சிங்கப்பூர், சீனா, தாய்வான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கடலட்டையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் உணவுப்பொருள் 43.1% புரதச்சத்தையும், 2.2% கொழுப்பையும் 27.6% கனியுப்புக்களையும் மற்றும் 27.1% ஈரலிப்பையும் கொண்டுள்ளன.

அநேகமாக, சீனர்களே உண்ணும் இவ்வுணவுப்பொருளை, சமைக்கும்போது நீரில் ஊறவிட்டு, மென்மையாக்கி, வேறுபல உணவுப்பொருட்களுடன் கலந்து, பலவித உணவுப்பண்டங்களைத் தயாரிக்கின்றார்கள். நமது நாட்டிலும் ஒரு சிலர் இதனை வறுவலாகவும் அல்லது வேறுசில இறைச்சி வகைகளுடன் முக்கியமாகக் கோழியிறைச்சியுடன் கலந்து சமைத்து உண்கின்றனர்.

தமிழர் தாயகமான வட-கிழக்குப் பிரதேசத்தினை அண்டிய கடற்பரப்பில் கடலட்டையின் உற்பத்தியும் அதன் செறிவும் அதிகளவில் காணப்படுவது நாம் யாவரும் அறிந்ததே. ஆனால், எமது பிரதேசத்தின் போர் காரணமாக இந்த வளத்தினை நாம் இதுவரை உபயோகிக்கமுடியாது இருந்துள்ளமை வேதனைக்குரியது.

தற்பொழுது நிலவும் சமாதானச் சூழலைப் பயன்படுத்தி இக்கடலட்டையினைப் பாரியளவில் உணவாக உட்கொள்ளும் சீனர்கள், எமது கடற்பரப்பில் மீன்பிடித்தொழிலை மேற்கொள்ளும்போது, எமது இந்த வளம் சூறையாடப்படும் சாத்தியங்கள் தென்படுவதாக அச்சப்படவேண்டியுள்ளது. கடலட்டையானது எமக்குப் பாரிய ஏற்றுமதி வருமானத்தினைத் தரக்கூடிய மீனுணவு மட்டுமல்ல, எமது மக்களின் புரதத் தேவைகளுக்கும் பெரிதும் பயன்படுத்தக்கூடியதாகும்.

✱

- வி. கலாநிதி.

# நுகர்வோர் பாதுகாப்பும் அது தொடர்பான சட்ட அமைப்பும்

திறந்த பொருளாதாரக் கொள்கை, உலகமயமாக்கல் என்பன காரணமாக நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பிலும், நுகர்வோர் எதிர்நோக்கி வரும் சவால்களிலும் பாரியளவிலான மாற்றங்கள் இடம்பெற்றுவந்துள்ளன. அரசாங்கம் அதன் அமைப்புரீதியான சீராக்கல்களினூடாக இன்றைய நிலைமையைச் சமாளிக்கும்பொருட்டு சில சீர்திருத்த நடவடிக்கைகளை எடுத்துவந்துள்ளது.

சந்தை தாராளமயமாக்கல், வெளிநாட்டு வர்த்தகத்தினைத் திறந்துவிட்டமை மற்றும் விலைக்கட்டுப்பாட்டுப் பொறிமுறைகள் தணிக்கப்பட்டமை என்பவற்றின் விளைவாகப் பொருட்கள் மற்றும் சேவைகளின் வழங்கப்படும் நிலைமையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எனினும், இத்தகைய பாரிய மாற்றங்களின் பின்னணியில் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் என்பனவற்றினைப் பாதுகாப்பதற்கெனப் பின்பற்றப்பட்டு வரும் வழிமுறைகளை மீளாய்வு செய்து, புதுப்பித்துக் கொள்வதற்குரிய தருணம் இப்போது எழுந்துள்ளது.

1990 களின் பிற்பகுதியில் நுகர்வோரைப் பாதுகாக்கும் பல சட்டவாக்கங்கள் உருவாக்கப்பட்டன. வர்த்தகம்- சார்புரீதியான சுதந்திச் சந்தைச் சூழல் ஒன்றின்கீழ் ஒழுங்குபடுத்துவதற்கு குறைந்தபட்ச அளவிலான அரசாங்கத் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

தனியார்துறையுடன் கூட்டாக இணைந்து விலைகளை நிர்ணயித்தல், பாரியளவில் மலிவான பொருட்களைக் கொட்டிக் குவித்தல், நிறுவனங்களின் உழைப்புக் காரணமாகத் தோன்றும் சுகபோகங்கள் போன்ற போட்டிக்கு எதிரான நடைமுறைகளிலிருந்து தோன்றக்கூடிய மோசமான தாக்கங்களைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு, மேலும் தலையீடுகளை மேற்கொள்ளல் என அரசாங்கம் தனது தலையீடுகளை மேற்கொண்டு வருகின்றது.

மிகத் தீவிரமான விலைத்தளம்பலைக் குறைந்தபட்சத்தில் வைத்திருப்பதன் மூலம் - அரசாங்கமானது நுகர்வோரினதும், உற்பத்தியாளரினதும் நலனைப் பாதுகாக்கும் நோக்கத்தினைக் கொண்டுள்ளது.

கடந்த தசாப்தத்தின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார மாற்றங்கள் நுகர்வோர் தொடர்பான அரசின் கடமைகளிலிருந்து பாரியளவிலான மாற்றங்களை எடுத்து வந்துள்ளன. வருமானப் பகிர்வில் வறுமை மற்றும் ஏற்றத்தாழ்வுகள் என்பனவற்றினைத் தடுத்து நிறுத்து வதற்கும், மக்களுக்கு வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதற்கும் வறுமை ஒழிப்பிற்கான ஓர் அத்தியாவசிய நிபந்தனை என்ற முறையில் உயர்விகிதத்திலான பொருளாதார வளர்ச்சியை எடுத்து வருவதற்கு அனைத்துவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மறுபுறத்தில் உலகச்சந்தைச் சக்திகள், உலகமயமாக்கல், விஞ்




ஞான மற்றும் நவீன தொழில்நுட்பம், சுற்றுப்புறச்சூழல், வாழ்க்கைத்தரம், நுகர்வோர் பாதுகாப்பு போன்ற பிரச்சினைகளின் தோற்றம் - சாதனைகளை எடுத்துக்காட்டுவதுடன் நுகர்வோரின் எதிர்பார்ப்புகளுக்குப் பொருந்தக்கூடியவிதத்தில் அரசின் பாத்திரத்தினை உருவாக்கிக்கொள்வதற்குக் கவனத்தில் எடுக்கப்படவேண்டிய விடயங்களை முன்வைக்கின்றன. சந்தை இயங்கியலை ஒழுங்குமுறைப்படுத்துவதும், பொருளாதாரம், தொழில்களின் தரம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நுகர்வோர் பாதுகாப்பு, பண்டங்கள், சேவைகள் என்பனவற்றின் தரம் மற்றும் தராதரங்கள் என்பனவற்றின் மீதான அதன் தாக்கத்தினை ஒழுங்குமுறைப்படுத்துவதும்,

நுகர்வோரின் அக்கறைகளைக் கவனத்தில் எடுத்து அவற்றுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் ஓர் அமைப்பாகச் செயற்படுதலுமாகச் சர்வதேசப் போட்டிக்குத் திறந்துவிடப்பட்ட பொருளாதாரமானது, பாதுகாப்பற்ற பண்டங்கள் சந்தையில் வந்து குவிவதனை அனுமதிக்கமுடியாது. இதன்பொருட்டு அரசாங்கமானது பொருத்தமான தரநிர்ணயத்திலும் கூடுதல் கவனம் செலுத்தவேண்டிய நிலைமை வந்துள்ளது.

எனவே, நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாத்தலென்பது ஒரு தார்மீக தேவையாகவும், சட்டரீதியான தேவையாகவும் இருந்து வருவது மட்டுமன்றி, அது மிகவும் செயற்திறன்மிக்க பொருளாதார முறைகளில் ஒன்றாகவும் இருந்துவருகின்றது.

மானுடம், கண்ணியம் என்ற விடயங்கள்- நவீன நாகரிகத்தின் அடிப்படையாக இருந்துவருவதுடன், ஐ.நா.வின் பட்டயத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும், ஐ.நா. பொதுச்சபை 1985 இல் உருவாக்கிய நுகர்வோர் பாதுகாப்பு வழிகாட்டு நெறிமுறைகள் மூலம் அது மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளது. அந்த நெறிமுறைகளை நிறைவேற்றவேண்டிய கடப்பாட்டினை நாமும் கொண்டுள்ளோம். அத்தகைய வழிகாட்டு நெறிமுறைகளின் குறிக்கோள்கள் கீழே தரப்படுகின்றன.

1. நுகர்வோர் என்ற முறையில் தமது குடிமக்களுக்குப் பொருத்தமான பாதுகாப்பினை வழங்கி, அதனைச் சாதித்துக் கொள்வதற்கு நாடுகளுக்கு உதவுதல்.

2. நுகர்வோர் தேவைகள் மற்றும் விருப்புக்கள் என்பவற்றினை நிறைவுசெய்து வைக்கக்கூடிய உற்பத்தி மற்றும் விநியோக முறைகளுக்கு வசதி செய்து கொடுத்தல்.

3. பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பனவற்றின் உற்பத்தி மற்றும் விநியோகம் என்பனவற்றுக்குப் பொறுப்பாக இருந்து வருபவர்களுக்குக் கண்டிப்பான தார்மீக நடத்தை நெறிமுறைகளைப் பின்பற்ற ஊக்கமளித்தல்.

4. நுகர்வோருக்குத் தீங்கு விளைவிக்கும் மிக மோசமான வர்த்தக நடைமுறைகளைத் தேசியரீதியிலும், சர்வதேசரீதியிலும் நிறுத்திக் கொள்வதற்கு நாடுகளுக்கு உதவுதல்.

5. சுதந்திரமான நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்களின் உருவாக்கத்திற்கு வசதி செய்துகொடுத்தல்.

6. நுகர்வோர் பாதுகாப்புத் தொடர்பான விடயத்தில் சர்வதேச ஒத்துழைப்பினை ஊக்குவித்தல்.

7. நுகர்வோருக்குக் குறைந்த செலவில் உயரளவிலான தெரிவுகளைப் பெற்றுக்கொடுக்கும் சந்தை நிலைமைகளை பெற்றுக்கொள்வதற்கு ஊக்குவித்தல்.

*(தொடரும்)*

- எஸ். வசந்தகுமார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

ஐயவுணர்வு எய்தியக் கண்ணும் பயம்இன்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு

- திருக்குறள்.

# நமது நோக்கு

## வொஷிங்ரன் பணச்சடங்கு

ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் சந்திப்புக்கு முன்னோடியாக- வொஷிங்ரனில் நடைபெற்றுவரும் மாநாடு, உதவிகள் தேவைப்படும் தொகுதியினரான தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் ஏதுமின்றி இன்று முடிவுக்கு வருகின்றது.

போரினால் சீரழிக்கப்பட்டு, சிதைக்கப்பட்டு அடிப்படைக் கட்டுமானங்கள் யாவும் வெகுவாகப் பாதிப்படைந்து போயிருக்கும் வட - கிழக்குப் பகுதிகளின் பெயரால் - யுத்தத்தின் பாதிப்புக்களிலிருந்து 'இலங்கையை மீளப் பெற்றுக்கொள்ளுதல்' என்ற அலங்கார வார்த்தையுடன் முன்னெடுக்கப்பட்ட இந்த மாநாட்டில் - பாதிக்கப்பட்டோரின் குரலெதுவுமே ஒலிக்கப்படாமல் - போரின் வடுக்களைக் களைவதாக உபகாரிகளால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடி மாநாடு - அது கூட்டப்படுவதற்கான அடிப்படைக் காரணமாக, அடித்தளமாக இருக்கவேண்டிய மனித நேயத்தைப் புறந்தள்ளி பிராந்திய அரசியலும், சர்வதேச சுயநோக்கும் ஆதிக்கம் செலுத்த அரங்கேறியிருக்கிறது.

இலங்கைத் தீவில் கடந்த இருபது ஆண்டுகளாகத் தொடரும் போரினால் அழிக்கப்பட்ட தமிழர் தாயகப் பகுதிகளுக்கான உடனடி உதவிகள் என்று கூறிவிட்டு, அந்த நோக்கம் படிப்படியாக இலங்கை முழுவதற்குமாக விரிவாக்கப்பட்டு, இன்று 'இலங்கையை மீளப் பெறுதலாக' விரிவாக்கம் பெற்று நிற்கிறது.

திட்டமிட்ட இந்த விரிவாக்கத்தினால், உடனடி உதவிக்காக எதிர்பார்த்து நிற்கும் வட - கிழக்குப் பகுதியிலிருந்தான கவனம் குறைந்து, தளர்வுற்று - வழக்கம்போல தெற்குப் பகுதிகளுக்கான அபிவிருத்தியை மீண்டும் முக்கியப்படுத்த கொழும்பு ஆட்சியாளர்கள் கரிசனை கொள்ள ஆரம்பித்திருக்கின்றனர்.

அமைதி, சமாதானத்தின் பெயரைச் சொல்லி - தெற்கை அபிவிருத்தி செய்யவும், பாழ்பட்டுப் போயிருக்கும் இலங்கைப் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பவும். அதனூடாகத் தமது அரசியற்தளத்தைப் பலப்படுத்திக் கொள்ளவும் - அரசாங்கத் தரப்பு முன்னெடுத்த முயற்சி, வொஷிங்ரனில் ஆதாயம் கண்டிருக்கிறது.

போர் ஓய்ந்து ஒருவருடம் கடந்தும் - இன்னமும் தமது வீடுகளுக்குத் திரும்ப முடியாது தடுக்கப்பட்டிருக்கும் மக்களும், அடிப்படை வைத்திய வசதிகளும் - கல்வி வாய்ப்புக்களும் கைக்கெட்டாதிருக்கும் பரிதாபமும், நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக சிதைந்து போகும் கட்டுமானங்களும், எந்த முன்னேற்றமுமின்றி நலிந்துபோகும் தொழில் வாய்ப்புக்களுமாக - போரின் விளைவுகள் தமிழ் மக்களை விட்டு அகலாது நிற்க -

'இலங்கையை மீளப் பெற்றுக்கொள்ள' வொஷிங்ரனில் பணச்சடங்கு நடைபெற்றிருக்கிறது.

வொஷிங்ரனில் - இலங்கை அரசாங்கம் கோரியிருந்த 1.3 பில்லியன் டொலர்கள் உதவியில், 459 மில்லியன் டொலர்களே வட - கிழக்குக்கென 'ஒதுக்கப்பட்டிருக்கும்' நிலையானது - புனரமைப்பு, புனர்வாழ்வு இலக்கு- உலக்கை தேய்ந்து உளிப்பிடியாகும் கட்டத்திற்குச் சென்றுகொண்டிருப்பதையே காட்டுகிறது.

வட - கிழக்கிற்கென ஒதுக்கப்பட்ட இந்த நிதியிலும் எத்தனை சதவீதம் மெய்யாகவே வட - கிழக்கை வந்தடையும் என்பது பற்றிய சந்தேகம், கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் தமிழ் மக்களின் மனதைக் குடைந்துகொண்டிருப்பது ஒருபுறமிருக்க -

வொஷிங்ரன் மாநாட்டில் 'பழைய குருடி கதவைத் திறவடி' பாணியில் மாறாத தனது பழைய பார்வையுடன்- விடுதலைப் புலிகளின் பங்கேற்பைத் தடுத்த அமெரிக்காவும் - புலிகள் பங்கேற்காமையை உறுதிப்படுத்திக் கொண்டே, உளப்பூர்வமாக அதனை விரும்பியவாறே மாநாட்டில் கலந்துகொண்ட இந்தியாவும் - விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பின்றி வட - கிழக்கில் அபிவிருத்திகள் எதுவுமே சாத்தியமில்லையென அறிவித்துக் கொண்டே, வொஷிங்ரனுக்கு விடுதலைப் புலிகள் அழைக்கப்படாதது பற்றி மௌனம் சாதித்த இலங்கையும் - தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஏமாற்றத்தையும் ஆட்சேபத்தையுமே சம்பாதித்திருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கொண்டு அரசியல் ஆதாயம் தேடிக்கொண்ட சிங்களத் தலைவர்களதும், பிராந்திய சக்திகளதும் நினைவுகள் நிலைத்திருக்க,

இன்றும் - அமைதி, சமாதானத்தின் பெயரால் - தம்மை வலுப்படுத்தவும், நன்மைகளைப் பெற்றுக்கொள்ளவும் முனைந்து நிற்கும் கொழும்பு அரசாங்கத்தையும் பிராந்திய, சர்வதேச சக்திகளையும் - மனக்கசப்புடனே தமிழ் மக்கள் நோக்குகின்றனர் என்பதும் வலியுறுத்திச் சொல்லப்படவேண்டியதாகிறது.

# இராஜதந்திரிகளுக்குத் தெரிந்த உண்மை ஆனந்த சங்கரிக்கு ஏன் தெரியவில்லை?

## உலகத் தமிழ்ப் படைப்பாளிகள் கழகம் கேள்வி



ஆனந்தசங்கரியின் புலி எதிர்ப்பு நிலைப்பாட்டைப் பரிசு வழங்கிக் கௌரவிக்கவே யாழ். நூலகத்துக்கான நூல்களை இந்திய அரசு அவரிடம் வழங்கியதாகக் கனடாவின், ரொறன்ரோ நகரிலிருந்து - உலகத் தமிழ்ப் படைப்பாளிகள் கழகம் (World Thamil Creative Writers Association) கடந்தவாரம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

விடிய விடிய இராமர் கதை விடிந்த பின்பு இராமருக்குச் சீதை என்ன முறை என்று கேட்ட புத்திசாலிபோல, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி 'இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் அரசு, விடுதலைப் புலிகளுடன் மட்டுந்தான் பேசவேண்டும் என்று கூறினோமே தவிர, தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் புலிகள்தான் என்று நாங்கள் ஒருபோதும் கூறியிருக்கவில்லை' என திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்.

ஆனந்தசங்கரிக்கு இந்த ஞானோதயம் திடீரென்று ஏற்பட்டதல்ல. கொஞ்சக் காலமாகவே உதட்டளவில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்துக் கொண்டு, மனத்தளவில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான திரைமறைவுப் பரப்புரையைச் செய்து வந்திருக்கிறார்.

ஆனந்தசங்கரியின் கடந்தகால அரசியல் தெரிந்தவர்களுக்கு அவர் எப்போதுமே தமிழினத்தின் நலனைவிடத் தனது சொந்த நலனிலேயே அதிக கவனம் செலுத்திவந்திருக்கிறார் என்பது விளங்கும். தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒட்டுமொத்த கருத்துக்கு மாறாக அன்றைய ஜனாதிபதி ஜெயவர்த்தனா காலில் விழுந்து கிளிநொச்சியைத் தனி மாவட்டமாக அறிவிக்கச் செய்தவர். தேர்தல் அரசியலை மனதில் வைத்துத்தான் கிளிநொச்சியைத் தனி மாவட்டமாக்கினார். எப்போதுமே 'என் வழி தனி வழி' என்று நடந்து கொள்வது ஆனந்தசங்கரியின் போக்காகும்.

தமிழீழத் தேசத்தின் இதயமெனக் கருதப்படும் வன்னிப் பெருநிலப்பரப்பை ஊடறுத்து, விடுதலைப் புலிகளை அழித்தொழிக்க ஜனாதிபதி சந்திரிகா அரசு மேற்கொண்ட ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின்போது ஏ-9 நெடுஞ்சாலை திறப்பது தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும்' என்று லாலி பாடியவர் ஆனந்தசங்கரி.

தமிழீழ மண்ணை ஆக்கிரமித்த சிங்கள இராணுவத்தை எதிர்த்து தீரத்துடன் நடத்திய ஆயுதப் போராட்டத்தை முறியடிக்க முடியாத நிலையிலேயே இன்று சிங்கள அரசு விடுதலைப் புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்துகிறது.

ஆனந்தசங்கரியும் மற்றவர்களும் இந்தியாவிற்கு ஓடி ஒளிந்துகொண்ட காலத்தில், விடுதலைப் புலிகளே மண்ணில் நின்று கொண்டு களத்தில் எதிரி படையோடு போரிட்டார்கள்.

முன் எப்பொழுதும் இல்லாதவாறு தமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப்பட்டுத் தேர்தலைச் சந்தித்த காரணத்தால் தமிழர் தேசியக் கூட்டணி 15 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இந்த வெற்றிக்கு வட-கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் நடாத்திய பொங்கு தமிழ் எழுச்சிப் போராட்டமே கால்கோள் இட்டது. அவர்களே தெருத் தெருவாக, வீடுவீடாக தமிழ்த் தேசிய கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டினார்கள்.

பொங்கு தமிழ் நிகழ்ச்சியில் எதிலும் கலந்து கொள்ளாத ஒரே அரசியல்வாதி ஆனந்தசங்கரி மட்டுமே. எனவே அவரது தேர்தல் வெற்றி விதைக்காமல் அறுவடை செய்த ஒன்றாகும்.

ஆனந்தசங்கரி - 'முன்னர் வெளிநாட்டு இராஜதந்திரிகள் கொழும்பில் இருக்கும் எங்களோடு பேசினார்கள். இப்போது அவர்கள் கிளிநொச்சிக்குப் போய் புலிகளோடு பேசுகிறார்கள்' என்று புலம்பி இருக்கிறார். ஒப்பாரி வைத்திருக்கிறார்.

விடுதலைப் புலிகள் மட்டுமே தமிழ்மக்களது ஏக பிரதிநிதிகள் என்பதால்தான் வெளிநாட்டு இராஜதந்திரிகள் கிளிநொச்சிக்குப் போய் விடுதலைப் புலிகளுடன் பேசுகிறார்கள். வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்குத் தெரிந்த இந்த அடிப்படை உண்மை ஆனந்தசங்கரிக்கு மட்டும் ஏன் விளங்கவில்லை?

தமிழர் விடுதலைக் கூட்டணியை ஓரங்கட்டிய இந்திய அரசு திடீரென்று ஆனந்தசங்கரியைக் கூப்பிட்டு யாழ்ப்பாண நூல் நிலையத்துக்கு 1,300 நூல்களை அன்பளிப்புச் செய்தது. அப்போது பேசிய ஆனந்தசங்கரி தன்னை ஏன் இந்தியத் தூதுவர் அழைத்து அந்த நூல்களைத் தரவேண்டும் என்பது தனக்கு விளங்கவில்லை என்றார்.

ஆனந்தசங்கரிக்கு இப்போது ஒன்றுமே விளங்குதில்லை. இந்தப் பூனையும் பால் குடிக்குமா? என்ற தோரணையில் அவர் நடந்து கொள்கிறார். ஆனந்தசங்கரியின் புலி எதிர்ப்புக்குத்தான் இந்தியா 'பரிசு' வழங்கி அவரைக் கனம் பண்ணியது என்ற உண்மை அரசியல் பால பாடம் படித்தவர்களுக்கே விளங்கிவிடும்.

ஆனந்தசங்கரி யாழ்ப்பாண நூலகம் திறந்து வைக்கப்படாததைக் கண்டித்து நீண்ட அறிக்கை வெளியிட்டார். ஏதோ யாழ்ப்பாண நூலகத்தை உடனடியாகத் திறந்துவைக்காவிட்டால் நாட்டில் பிரளயம் ஏற்படும் என்ற மாதிரி அவரது அறிக்கை இருந்தது.

தெரியாமல் கேட்கிறோம்- இன்று தமிழீழ மக்களை எதிர்நோக்கி இருக்கிற தலையாய சிக்கல் யாழ்ப்பாண நூலகத் திறப்பு விழா ஒன்றுதானா?

போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டும், தமிழ் மக்களுக்கு இயல்பு வாழ்வு இன்னும் திரும்பவில்லை. பத்து இலட்சம் தமிழ் மக்கள் தங்கள் சொந்த வீடுகளில் குடியிருக்க முடியாமல் அகதி முகாம்களில் அல்லற்படுகிறார்கள். அவர்களது வீடுவாசல்களைச் சிங்கள இராணுவம் ஆக்கிரமித்துள்ளது.

மீனவர்கள் தங்கள் கடலில் தங்கள் தொழிலைச் சுதந்திரமாகச் செய்ய முடியாமல் திண்டாடுகிறார்கள். நேரக் கட்டுப்பாடு, தூரக் கட்டுப்பாடு, அனுமதிப் பத்திரம் என்று சிங்கள இராணுவத்தின் கெடுபிடியிலிருந்து அவர்களுக்கு இன்னும் விடுதலை கிடைக்கவில்லை.

குழந்தைகளுக்குச் சத்துணவு இல்லை. இடிந்த பள்ளிக்கூடங்கள் திருத்தப்படவில்லை. இருக்கிற பள்ளிக்கூடங்களுக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை. அவற்றை நிரப்பக் கூறி தமிழர் ஆசிரியர் சங்கம் வேலைநிறுத்தப் போராட்டம் நடத்துகிறது. திருகோணமலை மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றம் தங்கு தடையின்றி நடக்கிறது.

இவைபற்றி ஆனந்தசங்கரிக்கு அறிக்கைவிட நேரமும் இல்லை, நினைப்பும் இல்லை. திருமணம் என்றும், சொந்த விடயம் என்றும் இந்தியாவுக்கு அடிக்கடி பறந்து போவதிலேயே அவர் தனது நேரத்தைச் செலவிடுகிறார்.

ஆனந்தசங்கரி ஒன்றை மட்டும் விளங்கிக் கொள்ளவேண்டும். விடுதலைப் புலிகளின் அளப்பரிய வீரம், ஈகம், துணிவு காரணமாக அவர்களைச் செருக்களத்தில் வெல்ல முடியாது என்ற நிலை ஏற்பட்டது. அந்த உண்மையை உணர்ந்து கொண்ட ஸ்ரீலங்கா அரசு - விடுதலைப் புலிகளோடு போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டு அமைதி வழியில் ஒரு அரசியல் தீர்வைக் காண்பதற்கு அனைத்துலக சமூகத்தின் ஒத்துழைப்போடு இரு சாராருக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்று வருகின்றது.

இந்த நேரத்தில் ஆனந்தசங்கரி போன்றோர் குட்டையைக் குழப்புவதை 'நாங்களும் மக்கள் பிரதிநிதிகள்' 'எங்களுக்கும் ஆனை, சேனை இருக்கிறது' என்ற தோரணையில் பேசுவதைத் தமிழ் மக்கள் விரும்பமாட்டார்கள். மாறாக அதனை இனத்துரோகம் என்றே எண்ணுவார்கள். அவரது கொடும்பாவி எரிக்கப்பட்டதும், அவருக்கு எதிராகப் பொது அமைப்புக்கள் கண்டன அறிக்கைகள் வெளியிட்டு வருவதும் அந்த எண்ணத்தை உறுதிப்படுத்துகிறது.

தேர்தல் அரசியலால் எதையும் சாதிக்க முடியாது அது தோற்றுப் போனதால்தான் ஆயுதப் போராட்டம் வெடித்தது. கடந்த காலங்களில் தேர்தல் அரசியல் சிலரது பதவி நாற்காலி ஆசையை நிறைவேற்றவே உதவி இருக்கிறது. வேறு உருப்படியான பலன் எதுவும் இருக்கவில்லை.

தேர்தலில் ஆனந்தசங்கரி போன்றோர் தெரிவுசெய்யப்படுவதற்குக் காரணம் விடுதலைப் புலிகளுக்குத் தேர்தல் ஆசை இல்லாமல் இருப்பதுதான். பிள்ளை இல்லாத வீட்டில் கிழவன் துள்ளிக் குதிப்பதுபோல் விடுதலைப் புலிகள் போட்டியிடாத காரணத்தால் ஆனந்தசங்கரி போன்றோர் நாடாளுமன்றம் போக முடிகிறது. இதை அவர் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இருந்தும் இன்றைய காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டம் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் நடைபெற வேண்டிய தேவை இருக்கிறது.

ஆனந்தசங்கரி போன்ற மூத்த அரசியல்வாதி அந்தப் பணியைச் செவ்வனவே செய்ய முன் வரவேண்டும். இதில் யார் பெரிது, யார் யாருக்கு அடங்கிப் போக வேண்டும் என்ற சண்டித்தனம் அவசியமற்றது.

யானை தனது தலையில் மண்ணை வாரிக் கொட்டுவது போல் ஆனந்தசங்கரி தனது புலி எதிர்ப்பால் தனது தலையில் மண்ணைக் கொட்ட நினைத்தால் அது அவரது சுதந்திரம். ஆனால், வரலாறு அவரை மன்னிக்க மாட்டாது என்பதை மட்டும் அவருக்குச் சொல்லி வைக்க விரும்புகிறோம் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# இலங்கைப் பொருளாதார வளர்ச்சி இவ்வாண்டில் சாத்தியமானதாகும்

## சர்வதேச நாணயநிதியப் பணிப்பாளர் நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கை இந்த ஆண்டில் 5 தொடக்கம் 6.5 சதவீத பொருளாதார வளர்ச்சியைப் பேணக்கூடியதாக இருக்குமென்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான உதவி வழங்கும் நாடுகளின் குழுவின் முன்னோடி மாநாட்டில் நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவித்தார்.

பொருளாதார வளர்ச்சி வீதம் குறிப்பிட்டளவு பேணப்படுமானால் இந்த ஆண்டு முடிவில் இலங்கை பணவீக்கத்தை 4.5 வீதமாகக் குறைக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

மொத்த உள்ளூர் உற்பத்தியுடன் ஒப்பிடும்போது அரசாங்கத்தினால் பெறப்பட்ட உள்ளூர் வெளிநாட்டுக்கடன் 100 சதவீதத்துக்கும் கூடுதலாக இருக்கும்.

இதற்கான வருடாந்த வட்டி வீதம் 7.5 வீதமாக உள்ளது. 75 சதவீதமாக இது குறைக்கப்படுவதால் வட்டி வீதமும் 2.5 சதவீதமாக குறைக்கப்பட முடியும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# யாழ். நவீன சந்தைப்பகுதியில் சுகாதாரச் சீர்கேடு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நவீன சந்தைப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடுகள் அதிகரித்துள்ளதாகவும், சுகாதார ஊழியர்கள் அதனைக் கவனத்தில் கொள்வதில்லை என்றும் நவீன சந்தை வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

யாழ். நவீன சந்தை மலசல கூடங்கள் ஒழுங்கானமுறையில் பராமரிக்கப்படுவதில்லை. கழிவுகள் ஒழுங்காக அகற்றப்படுவதில்லை. அத்தோடு, கழிவுகள் போடுவதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டிகள் உடைந்தநிலையிலே காணப்படுகின்றன. மேல்மாடியிலுள்ள மலசல கூடத்திலிருந்து நிலவறை நோக்கி வரும் குழாய் இணைப்பு உடைந்த நிலையில் காணப்படுகின்றமையால், மல, சலம் என்பன வெடிப்பு வழியாக வெளியேறிப் பெரும் சுகாதாரச் சீர்கேடுகளை ஏற்படுத்துவதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

(சு)

## மருதங்கேணி வைத்தியசாலை புனரமைப்பு பணிகள் துரிதம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி கிராமிய வைத்தியசாலைப் புனரமைப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

நிக்கொட் நிறுவனத்தின் உதவியுடன் இவ்வைத்தியசாலை புனரமைக்கப்பட்டு வருகின்றது. தற்பொழுது இந்தக் கிராமிய வைத்தியசாலை தாளையடியிலுள்ள தனியார் வீட்டில் இயங்கி வருகின்றது. இதைவிட ஆழியவளையில் திலீபன் மருத்துவமனை இயங்கி வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கழகங்களுக்கிடையில் கிரிக்கெட் போட்டிகள்

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டு அமைச்சின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப்பிரதேச செயலகங்களுக்கிடையே நடைபெற்று வரும் விளையாட்டு நிகழ்வில், ஒரு அங்கமான கிரிக்கெட் போட்டி, நாளையும், நாளை மறுநாளும் நடைபெறவுள்ளன.

இதில் 28 கழகங்கள் பங்குபற்றுகின்றன. போட்டிகள் காலை 8 மணி முதல் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளன. ஆண்களுக்கான போட்டியில் 11 பேர் பங்குபற்றலாம் என்றும், 15 ஓவர்கள் வழங்கப்படவுள்ளதாகவும், ஒருவர் ஆகக்கூடியதான 3 ஓவர் பந்து வீசலாம் என்றும், பெண்களுக்கான போட்டியில்-ஆறுபேர் பற்றுபற்றலாம் என்றும், 5 ஓவர் வழங்கப்படவுள்ளதாகவும், ஒருவர் 1 ஓவர் மட்டும் பந்துவீசமுடியும் எனவும் விளையாட்டுப் பொறுப்பதிகாரி ஒருவர் தெரிவித்தார். (சு)

## மட்டு-கொழும்பு ரயில் சேவை வழமைக்குத் திரும்பியது!

மட்டக்களப்புக்கும் - கொழும்புக்கும் இடையிலான ரயில் சேவைகள் மீண்டும் வழமைக்குத் திரும்பின. கடந்த 12 ஆம் திகதி மட்டக்களப்புக்கும் கொழும்புக்கும் இடையிலான ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

எனினும், ஏறாவூரில் கடந்த 13 ஆம் திகதி ரயில் பெட்டிகள் இரண்டு தடம்புரண்டதால், ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தன. தற்போது திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, ரயில் சேவைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன.

இதேவேளை, புதிதாக அமைக்கப்பட்ட வாழைச்சேனைக்கும் - மட்டக்களப்புக்கும் இடையிலான ரயில்பாதை தரமற்றதாகப் போடப்பட்டதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இதனாலேயே ரயில்பெட்டிகள் தடம் புரண்டதாகவும் கூறப்படுகிறது.

### ஆலோசனைக் கருத்தரங்கு

(அச்சுவேலி)

உலக இந்துமாநாடு தொடர்பான ஆலோசனைக் கருத்தரங்கு நாளை காலை 10 மணிக்கு, சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆலோசனைக் கருத்தரங்கில் இந்துசமய விவகார அமைச்சின் உதவிப்பணிப்பாளர் சிவமகாலிங்கம் உட்படப் பல சைவப் பெரியார்கள், பேராசிரியர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

### ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமைதோறும் நடைபெற்று வரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில், நாளை 'திருமுறைகளும் சித்தாந்தமும்' என்னும் விடயம் தொடர்பாகக் கலாநிதி க.கணேசலிங்கம் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

### சரசாலையில் புதிய முகாம் அமைப்பு

(சரசாலை)

சரசாலைப் பகுதியில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் அங்கிருந்து திங்களன்று விலகி அருகிலுள்ள தென்னந் தோட்டமொன்றினுள் புதிய முகாமொன்றை அமைத்து வருகின்றனர்.

(34)

### மாமரங்களுக்கு மருந்து விசிறும் பணி

(துன்னாலை)

நல்லினப் பழமரங்களில் பரவி வரும் சுருட்டை நோயைத் தடுப்பதற்காக விவசாயத்திணைக்களத்தின் சுகாதாரப்பிரிவினரால் துன்னாலைப் பகுதியிலுள்ள மாமரங்களுக்கு மருந்துகள் விசிறப்பட்டு வருவதுடன், அதுபற்றிய விளங்கங்களும் அளிக்கப்பட்டு வருகின்றது.

(12)



## கேள்வி அறிவித்தல்

**பிரதம பொறியியலாளர் அலுவலகம்,**
**கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்),யாழ்ப்பாணம்**

01. கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபையினரால், 2003 ஆம் ஆண்டு, வைகாசி மாதம் 07 ஆம் திகதி - புதன்கிழமை முற்பகல் 10 மணிவரை யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர் (மாகாணம்), கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

02. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு கீழே குறிப்பிடப்படும் தரங்களையுடைய அல்லது அதற்கு மேலுள்ள தரத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப் பத்திரங்கள் கோருவதற்குத் தகுதியுடையோராவார்.

03. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை யாழ்ப்பாணம், கட்டடங்கள், திணைக்களம் (மாகாணம்) நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப்பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்தி, பற்றிச்சீட்டைப் பெற்று, கேள்விப்பத்திரங்களை 2003 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிவரை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் ( மாகாணம்), நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விபரம் | பதிவுசெய்யும் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|---|
| 1. சிறுவர் பகல் பராமரிப்பு நிலையம் நிர்மாணித்தல், கோப்பாய் | எம் -8 | ரூ. 15,000/= | ரூ. 500/= |
| 2. ஸ்ரீபரமானந்தா சிறுவர் இல்லம் நிர்மாணித்தல், கரவெட்டி | எம் -9 | ரூ. 6,000/= | ரூ. 250/= |
| 3. அரச முதியோர் இல்ல, எழுதுவினைஞருக்கான விடுதி நிர்மாணித்தல், கைதடி | எம்-9 | ரூ. 5,000/= | ரூ. 250/= |

05. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு வேலைக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டுமே விநியோகிக்கப்படும்.

06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். மேலதிக விபரங்களை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), நிறைவேற்று பொறியியலாளரிடமிருந்து வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்),
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

எந்திரி. சு.சுந்தரகுமார்,
பிரதம பொறியியலாளர்,
யாழ்ப்பாணம்.

(சி/849)


## எங்கே போகிறோம்...?

நேசன்

# போதனா வைத்தியசாலையும் சுகாதார நிலைமையும்

ஒரு நாட்டின் அதி அத்தியாவசிய சேவைகளில் தலையாயது வைத்திய சேவை ~ மருத்துவப்பணி என்பது யாரும் மறுக்கமுடியாத விஷயம். பொது வைத்தியசாலைகள் வழங்கி வருகின்ற சேவையால் நன்மை அடைபவர்கள் மிகப்பெரும் எண்ணிக்கையில் உள்ளார்கள். அபிவிருத்தி நிலையில் பின்னடைந்து காணப்படும் எமது நாட்டில் இலவச மருத்துவப் பணி மட்டும் இல்லையென்றால் சாதாரண மக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள்.

தொற்றுநோய்கள், மர்மக் காய்ச்சல்கள் என ஏதும் பரவும் வேளையில்தான் இத்தகைய சேவையின் அருமை எமக்குப் புரியும்.

அம்மாதிரியான சந்தர்ப்பங்களில் மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் வைத்தியர்களும், வைத்தியசாலை ஊழியர்களும் பணிபுரிவதில் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை நேரில் காண்பவர்கள்தான் சரியாகப் புரிந்துகொள்ளவும் முடியும்.

அதேபொழுதில், இத்தகைய சேவைகளால் பயனடைகின்ற எமது பொதுமக்கள் எம்போன்ற மிகப்பலருக்கும் பயன் தருகின்ற இடமாயிற்றே என்று வைத்தியசாலையை நினைப்பதில்லை. பொதுமக்களின் உபயோகத்துக்குரிய எந்த இடத்தை எடுத்துக்கொண்டாலும், 'சுகாதாரம்' கேள்விக்குரிய ஒன்றாகக் காணப்படுவதை அவதானிக்க முடியும்.

குறிப்பாகக் கழிப்பறைகள் மற்றும் குளியலறைகள் இருக்கும் நிலைமை மிகவும் கவலைக்கு இடமாயிருக்கிறது. ஒரு பொது இடம் என்னும்போது, அதிலும் குறிப்பாக வைத்தியசாலை என்னும்போது, அத்தகைய இடத்தின் சுகாதார நிலைமைகள் மிகவும் கவனமாக அவதானிக்கப்பட வேண்டும். சுகாதாரம் மிகவும் சிரத்தையுடன் பேணப்பட வேண்டும் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள்.

சுகாதாரக் குறைவாக இத்தகைய இடங்கள் இருப்பதால் நோய்கள் பரவவும் ~ நோயாளிகள் அல்லாதோர்கூடப் பாதிக்கப்படவும் வாய்ப்பிருக்கிறது. அண்மையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவரின் அவதானிப்புக்குட்பட்ட சில நிலைமைகள் மிகவும் அதிர்ச்சி தருவனவாக இருந்தன.

சிகிச்சைக்காக அனுமதியாகியிருந்த அவர் காலைப்பொழுதில் இயற்கைக் கடமைகளுக்குச் சென்றபோது, பெரிதும் அதிர்ச்சிக்கு உள்ளானார். குளியலறை கழிப்பறைப் பிரிவில் நுழைந்த அவர் ~ கழிப்பறை வாளியைத் தேடி எடுத்து ( ஏனெனில் மூன்றோ நான்கு கழிப்பறைக்கும் பொதுவில் அங்கே ஒரே ஒரு பிளாஸ்ரிக் வாளிதான் உபயோகத்திலிருந்தது.) தொட்டியில் நிரம்பியிருந்த நீரை அதற்கென இருந்த தகரப் பேணியால் (அது வேறு பிரிந்துபோய்க் கிடந்தது) அள்ளி ஊற்றிக் கொண்டு, தன் கடமைக்குப் போகநேர்ந்தது.

திரும்பி வந்த அவர் முகம் கழுவலாம் என நினைத்தபோது, அதே காரியத்துக்கும் அந்தப் பாத்திரங்களையே உபயோகிக்க வேண்டியிருக்கும் அதிர்ச்சியையும் தரிசித்திருக்கிறார்.

ஏன் இந்த நிலைமை? இலவச வைத்தியத்துக்கு வருபவர்கள் மனிதர்களில்லையா? அவர்களின் தரம் ஏன் இத்தனை தூரம் குறைத்து மதிப்பிடப்படுகிறது. இந்த நிலைமை இப்போதல்ல, எப்போதுமே இப்படித்தான் என்று சிலர் அபிப்பிராயம் சொல்கிறார்கள். வேறு சிலரோ சில சில வார்ட்டுகளில் சுகாதாரம் ~ அந்தந்த வார்ட்டின் பொறுப்பதிகாரிகளால் இறுக்கமாகப் பேணப்படுகிறது. அதேநேரம், சில இடங்கள் இப்படித்தான் எப்போதுமே என்கிறார்கள். சில சில வார்ட்டுகளில் பேணப்படுகின்ற சுகாதார வரன்முறைகள் எல்லாவற்றிலும் பேணப்படுவதற்கு ஒழுங்கு செய்யமுடியாதா?

"எங்களது அம்மா, அனுமதிக்கப்பட்டிருந்தபோது எங்களுக்குரிய வாளிகள்கூட நாங்கள்தான் கொண்டுபோயிருந்தோம்" என்று சொல்கிறார் இன்னொருவர். இதெல்லாம் சின்ன விஷயம் என்று கருதி அலட்சியம் செய்து விட்டார்களா?

இத்தகைய விஷயங்களை அற்ப விஷயங்களாகக் கருதும்போது, பாதிக்கப்படும் பொதுமக்களும் அற்ப மனிதர்களாகத்தானே நினைக்கப்படுவதாகப் பொருள்! பொது வைத்தியசாலையை நாடிவருபவர்கள் ஏழைகள், வசதியற்றவர்கள். ஆகவே, அவர்களுக்கு இந்த வசதிகளே தாராளம். அவர்களுக்கு அப்படியொன்றும் பெரிய அசௌகரியம் இல்லை. வசதியானவர்கள் வந்தால் அவர்கள் தத்தமது தேவைகளைத்தாமே தேடி வைத்துக்கொள்வார்கள் என்றா விளக்கம் தரப் போகிறார்கள்?

அண்மையில் வெளிநாடுகளில் வாழ்ந்து, சில சமயங்களில் தடுத்து வைக்கப்பட்டு, சிறையில் இருக்க நேர்ந்த ஒருவரைக் காணநேர்ந்தது. "அங்கையெல்லாம் மறியல் என்றால் கேவலமாக வைத்திருப்பதில்லை. எல்லா வசதிகளுடனும்தான் அங்கே கைதிகளை வைத்திருக்கிறார்கள்" என்று சொல்கிறார் அவர்.

இங்கு கைதிகளை விட நோயாளர்களுக்கு ஏன் இந்த நிலைமை! சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ~ நிரந்தரமான நிலைமைகளை அமுல்படுத்தக்கூடிய அதிகாரபீடத்தினர் இதனைக் கவனத்தில் கொள்ள மாட்டார்களா?

எத்தனையோ திருத்தங்கள், சீரமைப்புக்கள் மேற்கொள்ளத் திட்டம் போடுகிறார்களே. இந்தப் பொதுவைத்தியசாலைச் சுகாதார நிலையைச் சீராகப்பேணுவதற்கு முடியாதா?

எமது சமூகத்தைப் பொறுத்தவரை ஏழைப் பொதுமக்கள் சம்பந்தமான விடயம் என்றால் அலட்சியமாகக் கணிப்பதுதான் வழமை. அதனை எவருமே பெரியதாகக் கண்டுகொள்ள மாட்டார்கள். இதுவரைகாலமும் இப்படியிருந்துவிட்டோம், இனியாவது சம்பந்தப்பட்டவர்கள் இது பற்றிக் கவனம் கொள்வார்களா? பொது வைத்தியசாலையினை எமது பொதுமக்களும் கவனமாகப் பேண ஒத்துழைப்பார்களா?

வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு என்றால் ~ இருந்த இடத்தில் இருந்தபடியே எச்சிலைத் துப்பிவிடுபவர்கள் எத்தனைபேர்? எப்போது நாம் நாகரிகமடைந்த மனிதர்கள்போல நடந்துகொள்ளப்போகிறோம்? எம்மைப்போல மற்றவர்களும் பயன்படுத்தும் இடமல்லாவா? எமது வைத்தியசாலை அல்லவா? எமது மக்களுக்குரிய பொதுச்சொத்து அல்லவா? நாம் ஏன் இதுபற்றிக் கொஞ்சமும் சிந்திப்பதில்லை?

*மீண்டும் சந்திப்போம்......*

# இளம் சமுதாயம் தறிகெட்டு அலைகிறதா....?

யாழ். குடாநாட்டிலுள்ள இன்றைய இளைய சமுதாயத்தின் மனநிலை மற்றும் அவர்களின் செயற்பாடுகள் தொடர்பாக பொதுமக்களுடன் உரையாடியபோது, அவர்கள் ஒவ்வொருவரும் தெரிவித்த கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

*சந்திப்பு: லிவிங்ஸ்டன், எவ்.எக்ஸ்.சுதர்சன்*

**தட்ஷாயினி ஞானப்பிரகாசம்**
(வயது 18 - யாழ்ப்பாணம்)

இண்டைக்கு ஒரு பொம்பிளைப்



பிள்ளை றோட்டால் தனியப் போகேலாத நிலைமை யாழ்ப்பாணத்திலிருக்கு. இவ்வாறான செயற்பாடுகளை, கூடுதலாக எங்களோட ஒத்த வயதினை உடைய இளம் சமுதாயம் செய்யிறதுதான் வெட்கம். அதோட, வயதில் மூத்தவர்கள் என்ற வேறுபாடின்றி, அனைவரையும் தகாத வார்த்தைகளால் கதைப்பது மட்டுமல்லாது, இப்படியான நடவடிக்கைகளை, தங்களுக்கு வடிவு என்றும் சிலர் கருதுகிறார்கள்.

**சின்னையா சிறிதரன்**
(வயது 22 - யாழ்ப்பாணம்.)

தற்போது யாழ்ப்பாண நிலைமையினைப் பார்த்தா, கொழும்பு மாதிரியான இடங்களுக்குப் போய்வாறதாலதான், சமுதாயச் சீரழிவுகள் அதிகரிச்சிருக்கு. இவ்வாறான செயல்கள அவங்கள் செய்கின்ற போது, அது நன்மையா? தீமையா என்று விளங்காமத்தான் செய்யிறாங்



கள். அதோட, பெரும்பாலும் விரக்தி நிலையிலேயே இன்றைய இளம் சமூகம் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது. உதாரணமாக, உயர்தரம்வரை படிச்சுப்போட்டு வேலை ஒன்றும் இல்லாம இருக்கிறவன் இப்படித்தான் செய்வான். அதால அவரவர் தகுதிக்கேற்ப வேலைவாய்ப்புக்களை வழங்கி, அவங்கள அதன் பக்கம் திசை திருப்பவேண்டும்.

**சின்னத்தம்பி விவேகானந்தன்**
(வயது 28 - கரவெட்டி)

இளையவர் மத்தியில் பிரச்சினை என்று பார்க்கின்றபோதுதான், அது மென்மேலும் வலுவடைவதாக நான் கருதுகிறேன்.



இவ்வாறு பிரச்சினையின் பக்கமே பார்க்காமல் சமுதாயம் தொடர்பான பல சீர்திருத்தங்களைக் கொண்டுவரவேணும். சமுதாயச் சீர்திருத்தக் குழுக்கள் மூலமாக நாங்கள் பிரச்சினையை இலகுவில் தீர்க்கக் கூடியதாக இருக்கும். அதனை விடவும் தாமாக திருந்துகின்ற மனப்பான்மையும் வரவேணும்.

**கிட்ணன் யோகநாதன்**
(கரவெட்டி - வயது 27).



தெற்குக் கலாசாரத்தை எங்கட இளஞ்சமுதாயம் பெரிதும் விரும்புது. இது எமது கலாசாரத்தோடு ஒப்பிடுகையில் படுமோசமான ஒன்று. இதனைத் தீயசக்திகள் அனுமதித்து தூண்டிவிட்டுள்ளாங்கள். கடந்த சில மாதங்களுக்கு முன்னம் இங்கேயே விபசார விடுதிகள் பல இருந்தன. ஆபாசப் படங்கள் இருந்தன. இதனைப் பார்த்த இளைஞர்கள் தமது கலாசாரத்தை மறந்த செயற்பாடுகளில் ஈடுபட்டனர். இதனை தடுப்பதில் ஊடகங்கள் பெரும்பங்கு வகிக்க வேண்டும்.

**சின்னையா பாலகிருஷ்ணன்**
(வயது 49 - யாழ்ப்பாணம்)

இளைஞர், யுவதிகள் மிகவும்



மோசமான நிலைமையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறாங்கள். எமது கடையைப் பொறுத்தவரையில் 16 வயது சிறுவன் தொடக்கம் சிகரட் வாங்க வருகிறார்கள். நாங்கள இதனைத் திருத்தமுடியாத நிலையில் இருக்கிறம். அதோட, பெண்கள் றோட்டாலே போகேலாத நிலைமையாக இருக்குது. பெண்களைப் பொறுத்தமட்டில் அனைவரும் அல்ல, சில பெண்கள் மிகவும் மோசமான உடைகளைத் தரிப்பது மட்டுமல்ல, சமூதாயத்தைச் சீரழிக்கின்ற வேலைகளில்கூட ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதனைத் தடுப்பதாயின், எங்கட தமிழ்க் கலாசார விழுமியங்களுக்கு ஏற்ற வகையில் மக்களை ஒழுங்குபடுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும். 95 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த சட்டம், ஒழுங்குகள் மீண்டும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

**ஆனந்தராஜா விக்னேஸ்வரி**
(திருகோணமலை)

இன்றைய இளைஞர் இரண்டு



வகையாக உள்ளனர். ஒரு சிலர் நல்லவர்களாக இருப்பார்கள். அதோட வேறு சிலர் மிக மோசமானவர்களாகவும் இருக்கிறாங்கள். இஞ்சத்தையப் பொறுத்தவரையில், சில இளைஞர்கள் மிகவும் படுமோசமான முறையில் நடந்து கொள்ளுகிறாங்கள். கேட்கக்கூடாத வார்த்தைகள் எல்லாம் பேசுகிறாங்கள். அவர்கள் இவ்வாறு செய்கின்றபோது அடிக்க வேணும் போல இருக்கும். ஆனால், அது முடியாது. ஏனெண்டால் நான் பெண்பிள்ளை. இப்படியான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களை புத்தி கூறித் திருத்தவேணும்.

**வேலுப்பிள்ளை சிவலிங்கம்**
(வய்து 47 - சங்கானை)

இன்றைய சமுதாயத்தின் போக்கு கட்டுப்படுத்தமுடியாத ஒன்றாக காணப்படுகிற அதேநேரத்தில், வீண் பொழுது போக்கி தங்கடை நேரத்தினை வீண்படுத்துகிறார்கள். ஒழுங்காக ஆலயம் சென்று வழிபடக்கூட முடியாத நிலைமையை இங்குள்ள



இளஞ் சமுதாயம் ஏற்படுத்தியிருக்கிறதோட, வீணானவிதத்தில் தெருக்களில் நிண்டு சேட்டைவிடுவது அவங்களுடைய வாழ்க்கையாகவும் மாறி வருகிறது. இவர்கள் அனைவரையும் திருத்த வேண்டியவர்கள், திருத்த வேண்டிய முறையில் திருத்துவார்களாயின் மற்றவர்களும் தானாகத் திருந்தி விடுவார்கள். பெண்களைப் பொறுத்தவரையில், ஒழுக்கம் கட்டுப்பாடு என்னவென்று இவர்களிடம் கேட்கவேணும்போல இருக்கு.

**இம்மானுவேல் குரூஸ் ஜான்சி**
(வயது 35 - யாழ்ப்பாணம்)

எங்கடை சமுதாய இளம்பிள்




ளையள், கலாசாரங்கள், பாரம்பரியங்கள் எல்லாவற்றையும் மறந்து போனாங்கள். மற்றது நாங்கள் இருந்த சூழல்களும் அப்பிடியானது. வெளிநாட்டில் இருந்து இங்குவந்து அவர்களது கலாசாரங்களை பரப்புவதால எங்கட சமுதாயம் தாம் என்ன செய்கிறோம் என்பதை மறந்த நிலையிலே வாழ்க்கை நடாத்துகிறார்கள். இவை அனைத்தையும் திருத்துவதென்பது பத்திரிகையாளர்களால்தான் முடியும். பத்திரிகையாளர்கள் அதனை எழுதினாலும் உட்கார்ந்து பார்க்கிறதுக்கு இன்றைய இளைஞர்களுக்கு நேரம் இருக்குமோ தெரியாது. இன்றைய இளைய சமுதாயம் பெரும்பாலும் வன்முறையில் தான் இருக்கிறாங்கள்.

**டாக்டர் ஜீ. எட்வேட்**
(வயது 66 - யாழ்ப்பாணம்)


கடந்த சமுதாயத்தையும் இப்ப இருக்கின்ற சமுதாயத்தையும் ஒப்பிட வேண்டும். நடத்தையிலும் சரி, பேச்சுக்களிலும் சரி பிறழ்வுபட்ட தன்மை காணக்கூடியதாக இருக்கு. இதற்கான காரணம் - தென்னிந்தியப் படமும், அன்னிய கலாசாரத்தைப் பின்பற்றுகின்ற தன்மையும்தான் ஆகும். இப்படி நாங்கள் நடந்துகொள்வதை ஒரு பஷனாக அவர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இதனால், அடுத்தவருக்கு இடையூறு ஏற்படுகிறது என்று அவர்கள் கருதுவதில்லை. இப்படி அவர்கள் செய்யும் சில செயற்பாடுகள், சமூகத்திற்கு விரோதமானவையாக இருக்கின்றன.

மற்றொரு குணம் - வயோதிபர்கள் மற்றும், தம்மைவிட வயது கூடியவர்களை மதிக்காத தன்மை. அத்தோடு, வயது வேறுபாடின்றி பெண்களைச் சீண்டுகின்ற தன்மையும் காணப்படுகின்றது. இவை யாவற்றையும் திருத்தவேண்டுமென்றால் இளைஞர், யுவதிகளுக்கான கருத்தரங்கு, ஒன்றுகூடல்கள் போன்றவற்றால் புத்தி புகட்டுதல் வேண்டும். அவர்கள் ஒன்



றாகச் சேர்ந்து நல்ல செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கவேண்டும். அத்தோடு, பாடசாலைகளில் சமூகத்துக்கும் எமக்கும் இடையிலான உறவை எவ்வாறு பேணவேண்டும் என்று பயிற்ற வேண்டும்.

# 'சார்ஸ்' வைரஸ் கிருமி தடிமன் வைரஸின் திரிபாம்



சார்ஸ் வைரஸின் நுணுக்குக்காட்டி தோற்றம்

உலகம் முழுவதிலும், 150 பேரின் மரணத்திற்குக் காரணமாகவும், தற்போது உலகை அச்சுறுத்திவருவதுமான சார்ஸ் வைரஸ் நோய், சாதாரண தடிமன் தொற்றின் ஒரு புதிய வடிவமே என விஞ்ஞானிகள் உறுதிசெய்துள்ளனர்.

Severe Acute Resipiratory Syndrome - SARS எனப்படும் தொற்று நோய்க்கான வைரஸ், சாதாரண தடிமன் நோயை உண்டாக்கும் கொரோனா வைரஸின் திரிபுபெற்ற ஒரு வடிவமேயென, ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

இதன்மூலம், இந்நோய்க்கான சிகிச்சையை விரைவுபடுத்த முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக, சுகாதார ஸ்தாபன அதிகாரிகள் தெரிவித்தனர். உலகம் முழுவதும் 20 நாடுகளில் மூவாயிரம் பேர் தற்போது இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.


# வடகொரியாவுடன் அமெரிக்கா சந்திப்பு



படையதிகாரிகளுடன் வடகொரிய ஜனாதிபதி

வட கொரியாவின் அணுவாயுதத் திட்டம் குறித்து, அந்த நாட்டு அரசுக்கும் அமெரிக்க அரசுக்கும் இடையிலான பேச்சு, சீனாவில் அடுத்தவாரம் நடைபெறவுள்ளது.

இதுவே இரு நாடுகளுக்கிடையிலான உயர்மட்டச் சந்திப்பாக இருக்கும் எனக் கூறப்படுகிறது.





உலகப் புகழ்பெற்ற கூடைப்பந்தாட்ட வீரர் மைக்கல் ஜோர்டன், நேற்றுடன் சர்வதேசப் போட்டிகளில் இருந்து விடைபெற்றார்.

# சிரியா மீதான அமெரிக்காவின் அச்சுறுத்தலுக்குக் கண்டனம்

எண்ணை வள நாடுகளான ஆறு முக்கிய மேற்கு வளைகுடா அரபு நாடுகள், சிரியாவை அமெரிக்கா அச்சுறுத்துவது குறித்து கண்டனம் வெளியிட்டுள்ளன. அமெரிக்க ஆக்கிரமிப்பில் உள்ள ஈராக்கில், விரைவில் இடைக்கால அரசு அமையவேண்டும் எனவும் அந்த நாடுகள் கோரியுள்ளன.

ஈராக்கியத் தலைவர்களுக்கு சிரியா தஞ்சமளிப்பதாகவும், பேரழிவு ஆயுதங்களை ஒளித்து வைத்திருப்பதாகவும் அமெரிக்கா தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகிறது. இதனிடையே ஈராக்கில் இருந்து சிரியாவுக்குச் சென்ற எண்ணெய்க் குழாயையும் தாம் மூடிவிட்டதாக அமெரிக்கா தெரிவித்தது.



ஈராக்கின் முன்னாள் உளவுத் துறைத் தலைவர் ஹிஜாசி, சிரியாவில் ஒளிந்துள்ளதாகவும் அமெரிக்கா குற்றஞ்சாட்டி வருகிறது. எனினும், சிரியா மீது தாக்குதல் ஏதும் நடாத்தும் திட்டம் இல்லை எனவும் அமெரிக்கா கூறுகிறது.



உள்ளூர் மருத்துவமனை ஒன்றில் தனது மூன்று குழந்தைகளுடன் சிகிச்சை பெறக் காத்திருக்கும் ஈராக்கியப் பெண்ணொருவர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இலங்கை சமாதானப் பேச்சுகள் எமக்கு நம்பிக்கையை தருகிறது

## தென்னாபிரிக்க நிபுணர் ரோல்வ் மேயர் பாராட்டு

(கொழும்பு)

இலங்கையின் சமாதானப் பேச்சு வார்த்தைகள் நம்பிக்கையான முறையில் முன்னேற்றம் கண்டுள்ளதாக, தென்னாபிரிக்க அரசியல் விவகார ஆலோசகர் ரோல்வ் மேயர் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது தென்னாபிரிக்காவிற்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடமே, தென்னாபிரிக்க அரசியல் விவகார ஆலோசகர் ரோல்வ் மேயர் இதனைத் தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவின் நிறத்துவேஷ நிலையைத் தவிர்த்து, தற்பொழுதுள்ள புதிய அரசியல் திட்டத்தினை உருவாக்குவதில், ரோல்வ் மேயர் முக்கிய பங்குவகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனடிப்படையில்- இலங்கையில் தற்பொழுது நிலவும் சமாதானச் சூழ்நிலையில், கடந்த வருடம் விடுதலைப் புலிகளையும், அரச தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடிய தன் பேரிலேயே ரோல்வ் மேயர் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (01)





மிற்சுயி ஸ்தாபனத்தின் புதிய படைப்பு
ஹினோடே சிமெந்து
(சி.783)
வேலைக்கு முந்தும் - ஜப்பானிய பெயர் !


# குருநகர் வீட்டுத் திட்டம் அமைக்க அமைச்சர் உதவி

குருநகர்ப் பகுதியில், 100 வீட்டுத்திட்டத்தை தாம் அமைத்துத் தருவதாக அமைச்சர் மகேஸ்வரன் உறுதியளித்துள்ளார்.

இடம்பெயர்ந்து வீடுகளற்ற நிலையில் வாழ்ந்து வருகின்ற குடும்பங்களுக்கு இந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. அத்துடன், இப்பகுதிப் பாடசாலைகளுக்கு தேவையான தளபாட, விளையாட்டு, ஆய்வுகூட வசதிகளையும் அடுத்த தவணை பாடசாலை ஆரம்பிக்க முன் செய்து தருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இப்பகுதியிலுள்ள விளையாட்டு மைதானத்தை சிறந்த முறையில் நவீனமயப்படுத்த, 10 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்குவதாகவும் அவர் தெரிவித்தார். இதேவேளை அமைச்சர் நேற்று குருநகர் பகுதி மக்களுக்கு அவரவர் வீடுகளில் சுகாதாரமிக்க மலசலகூடங்களை அமைப்பதற்காக மூவாயிரம் பக்கெற்றுக்கள் சீமெந்தை அன்பளிப்பாக வழங்கினார்.

# இந்திய அரசின் நிலைப்பாட்டுக்கு சுப்பிரமணியம் சுவாமி பாராட்டு

(சென்னை)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நாடுகடத்துவதான இந்தியாவின் கோரிக்கை இன்னமும் அமுலில் இருப்பதாக, இந்திய மத்திய அரசு மீண்டும் வலியுறுத்தியுள்ளதை, இந்திய ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி வரவேற்றுள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா இந்தியா வந்தபோது, இது குறித்து அவரிடம் இந்திய அரசு எடுத்துக்கூறியிருந்ததாகவும், இது வரவேற்கக்கூடிய விடயம் எனவும் சுப்பிரமணியம் சுவாமி மேலும் தெரிவித்தார்.

# உறக்கத்திலிருந்த சிறுவன் பாம்பு தீண்டியதால் மரணம்

குருநகர் பகுதியில் உறக்கத்தில் இருந்தபோது பாம்பு தீண்டியதில் சிறுவனொருவன் மரணமானான்.

குருநகர், ஐஸ் பிளான்ட் வீதிப் பகுதியிலுள்ள வீட்டில் இரவுவேளை ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது, சிறுவனை பாம்பு தீண்டியபோதும், சிறுவன் தனக்கு எலி கடித்ததாக பெற்றோரிடம் கூறியுள்ளான். மகன் கூறியதை நம்பிய பெற்றோர் அதற்கான முதலுதவிகளைச் செய்து உறங்கவிட்டனர். காலை 3 மணியளவில் வலி அதிகரிக்கவே, வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும் வழியில் சிறுவனது உயிாபிரிந்தது.

அதன் பின்னர், வைத்திய பரிசோதனையின்போதே சிறுவனுக்கு பாம்பு தீண்டியமை கண்டுபிடிக்கப்பட்டது.

மேற்படி சம்பவத்தில் ஐஸ் பிளான்ட் வீதி, குருநகரைச் சேர்ந்த நேரியஸ் அஜந்தன் (வயது 12) என்னும் சிறுவனே மரணமானவனாவான்.

சடலம் மரண விசாரணையின் பின்னர் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது.

### தமிழ்க் குழுக்க..

செய்த மாநாடு ஒன்றுக்கு புளொட்டின் அழைப்பை ஏற்று அபாஸ் இந்தியா வந்திருந்தார்.

தாக்கிவிட்டுத் தப்பியோடும் தந்திரத்தை பின்பற்றுமாறு வற்புறுத்திய அபாஸ், இத்தாக்குதல் நடத்தாமல் எந்தக் கெரில்லா அமைப்பும் தொடர்ந்தியங்க முடியாது என வலியுறுத்தியவராவார்.

கைதுசெய்யப்பட்ட அபு அபாஸ், 1985 இல் இத்தாலிய பயணிகள் கப்பலைக் கடத்தி ஒருவரைக் கொன்ற குற்றச்சாட்டின்பேரில், அவரை விசாரிப்பதற்காகத் தம்மிடம் ஒப்படைக்குமாறு தற்போது இத்தாலி அரசு, அமெரிக்க அதிகாரிகளைக் கோரியுள்ளது.

### இலங்கை...

வெளியான ஆங்கில திரைப்படத்தில் நடித்ததன் மூலம் இவர் தற்போது பிரபலமான நடிகையாக ஹொலிவூட்டில் விளங்குகிறார்.

### அரசுக்கான...

ஒருவரின் தாயார், நஞ்சருந்தித் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் பற்றி ஆராயவென மூதூருக்குச் சென்றபோது - அமைச்சர் ஹக்கீமுக்கும் அமைச்சர் மஹ்ரூப்புக்கும் இடையே பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது.

அமைச்சர் ஹக்கீம் இராஜினாமாச் செய்யவேண்டுமென மஹ்ரூப் அங்கு கோரினார். இதையடுத்து பலத்த சர்ச்சை மூண்டது.

கடத்தப்பட்ட இளைஞர்களில் ஒருவரின் தாயாரின் தற்கொலை உட்பட, இந்தப் பிரச்சினையாலும் மூதூரில் பெரும் பதற்றம் நிலவுகின்றது. மூதூர் பகுதிக்கான மின்விநியோகமும் நேற்றிரவு திடீரென நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் மூதூரில் நேற்றுக் கூடிய முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடம் - அமைச்சர் மஹ்ரூப் தெரிவித்த கருத்துக்களை வாபஸ் பெறவேண்டுமென்றும், பிரதமரோ அவரது பிரதிநிதியோ நேரில் வந்து விளக்கம் தரவேண்டுமென்றும், அதுவரையில் அமைச்சர் ஹக்கீமும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மூதூரை விட்டு வெளியேறுவதில்லை என்றும் முடிவுசெய்தது.

இதுபற்றி பிரதமருக்கும் நேற்றிரவு அறிவிக்கப்பட்டதாகவும், மூதூரிலிருந்து எமது செய்தியாளர் அறிவித்தார்.

இதேவேளை - ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடாவடித்தனம் புரிவதாகவும்- தமது எதிர்ப்பைக் காட்டுவதற்காக, அரசாங்கத்திற்கு வழங்கிவரும் ஆதரவை வாபஸ் பெறும் தீர்மானத்திற்கும் தாம் வரலாமென்றும் - முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர் ஒருவர் நேற்றிரவு கூறினார்.

இது இப்படியிருக்க - கடத்தப்பட்டதாகக் கூறப்படும் இரு முஸ்லிம் இளைஞர்களும், ஜிகாத் அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்றும்- மூதூரிலிருந்து கிடைத்த இன்னுமொரு செய்தி தெரிவித்தது.

இந்த இளைஞர்களது கடத்தலுக்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லையென, விடுதலைப் புலிகள் அறிவித்திருப்பது தெரிந்ததே.

பிந்திக்கிடைத்த தகவல்களின்படி, நேற்று நள்ளிரவுவரை நடந்த முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர்பீடக் கூட்டத்தில், மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கடத்தப்பட்ட இரண்டு முஸ்லிம் இளைஞர்களையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அமைச்சர் ஹக்கீம் மற்றும் மு.கா. நாடாளுமன்ற உறுப்பினர்களை பதவிவிலகுமாறு பகிரங்கமாக அறிவித்த அமைச்சர் மஹ்ரூப் மீது, ஐ.தே.க. நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பிரதமர் ரணில் இன்று திருமலைக்கு நேரில் வந்து - முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீடத்திற்கு விளக்கம் தரவேண்டும்.

என்ற மூன்று தீர்மானங்களும் நிறைவேற்றப்படும்வரை- அமைச்சரவைக் கூட்டத்துக்கோ, நாடாளுமன்றத்துக்கோ செல்வதில்லை எனவும் முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீடம் முடிவு செய்ததாக, நமது செய்தியாளர் மூதூரில் இருந்து தெரிவித்தார். (04,10,01)

### அன்னை பூபதி...

இடம்பெறும்.

வடமராட்சியில்- பருத்தித்துறை சிவன் கோயில் முன்றிலில் நினைவு நாள் நிகழ்வுகள் இடம்பெறும். (61,லி)

### மர்ம விமானங்...

குறிப்பிட்ட அதிகாரி, அவுஸ்திரேலியா சென்றிருந்தவேளையில் - இரகசியத் தகவலொன்றின் அடிப்படையில் பொலிஸார் இந்த வீட்டை முற்றுகையிட்டு விமானங்களைக் கண்டுபிடித்ததோடு, விசாரணைகளையும் மேற்கொண்டிருந்தனர்.

அதேவேளை -

விமானியாகக் கடமையாற்றும் ஒருவர், தனது சொந்தப் பாவனைக்கென விமானங்களை வைத்திருப்பதற்கு இலங்கைச் சட்டத்தில் இடமளிக்கப்பட்டிருப்பதால் - விசாரணைகள் தேவையற்றதென சட்டமா அதிபர் நேற்று திடீரென அறிவித்தார்.

இதனையடுத்து குறிப்பிட்ட வீட்டுக்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த பொலிஸாரும் அங்கிருந்து விலக்கப்பட்டனர். (01)

### புலிகளோடு...

சமாதானம் தேவை என்ற அவசியத்தையும் வலியுறுத்தினார்.

புலிகளுடன் இணைந்துதான் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும். வடக்கு - கிழக்கில் அவர்கள் பிரதான சக்தியாக விளங்குகின்றார்கள். அரசியல் தீர்வையும் விடுதலைப் புலிகளின் சம்மதத்துடன்தான் ஏற்படுத்த முடியும் என்று தெரிவித்த பிரதமர், சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக எதிர்க்கட்சிகளின் விமர்சனங்கள் குறித்து தாம் அலட்டிக்கொள்வதில்லை என்றும் கூறினார் .

பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறுமானால், ஐ.தே.மு. வெற்றி பெறும். ஆனால், அவ்வாறான தேர்தல் ஒன்று அவசியமில்லை. இருந்தாலும், பொ.ஐ.மு. ஆட்சியைக் கைப்பற்றப்போவதாகத் தெரிவிக்கின்றது. அது மிகவும் வேடிக்கையானது. எந்த சக்திகளாலும் ஐ.தே.மு. அரசாங்கத்தை மாற்றியமைத்துவிடமுடியாது என்றும் அவர் சொன்னார்.


FACE TO FACE WEB CAMERA

தொலை தூரங்களில் உள்ளவர்களுடன் முகத்துடன் முகம் பார்த்துக் கதைக்கும் நவீன தொலைத் தொடர்பு சாதனமான Web Camera வினை உங்கள் இல்லங்களில் அல்லது வியாபார ஸ்தலங்களில் வந்து பொருத்திக் கொடுக்க நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம் என்று நாம் சொல்லவில்லை, பல ஸ்தாபனங்களில் இதுவும் ஒன்று.

SRI SAKKARAH Computer Eye

இல 71/4 நவீன சந்தை மேல்மாடி, பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி.
(சி-850)

RAMCO CEMENT
ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

இலங்கையில் மட்டுமா இல்லை
இந்தியாவில் மட்டுமா இல்லவே இல்லை

ஆசியாவின் முதலாம் தர (நம்பர் 1) தொழிற்சாலையாக தெரிவு செய்யப்பட்ட தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் சீமெந்து, ராம்கோ சீமெந்து (கோபுர மார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்தியாவில் விற்பனையில் முதல்தர சீமெந்து
ராம்கோ சீமெந்து

SLS - 107 அங்கீகாரம் பெற்றது
ISO - 9002 தரம் பெற்றது
BSS - 12 - 1991 தரத்திற்கு அமைவானது

தற்பொழுது ராம்கோ சீமெந்து பருத்தித்துறை இறங்குதுறையில் இறக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

குறிப்பு: ☆ முன்கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும்.
☆ குடாநாட்டு மக்களின் பல கோடிரூபாய் பணத்தை மீதப்படுத்திய முதலாம் தர சீமெந்து ராம்கோ சீமெந்து.

ராம்கோ சீமெந்து ஏக இறக்குமதியாளர்கள்
ஈஸ்வரபகவான் & கொம்பனி
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. NO: 021 - 2222350
(சி-847)


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.